Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

R.R.R Advertising

K.K.S வீதி இணுவில் எனும் முகவரியில் இயங்கிவந்த கிளை தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை தெரிவிக்கின்றோம். 0785226818 எனும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 22 ஞாயிற்றுக்கிழமை (07.07.2015) பக்கங்கள் 20 ஓசை – 280

# வாய்ப்பை மறுக்கிறார் மாவை



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட சந்தர்ப்பம் தருமாறு தான் விடுத்திருந்த கோரிக்கையை தமிழரசுக்கட்சி தட்டிக்கழித்திருக்கும் நிலையில் யாழ். மாவட்டத்தில் தனது சார்பில் போட்டியிடுவதற்கு EPRLF கட்சி சந்தர்ப்பம் தருவதற்கு முன்வந்தபோதும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா முட்டுக்கட்டை போட்டுவிட்டதாக வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் குற்றம் சாட்டியிருக்கிறார்.

தேர்தலில் போட்டியிட தமிழரசுக் கட்சி சார்பில் சந்தர்ப்பம் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் நான் கோரிக்கை வைத்திருந்தேன். அது தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஆனால, யாழ். மாவட்டத்தில் EPRLF ற்கு வழங்கப்பட்ட இரண்டு ஆசனங்களில் ஒன்றை எனக்கு தருவதாக அந்த கட்சி தெரிவித்த போது, அதனை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா முற்றாக மறுத்து விட்டார்.

அனந்திக்கு எக்காரணம்

19 ஆம் பக்கம் பார்க்க

# ஆசனப் பங்கீடு எப்படி அமையும்

## வெளியாகியது கூட்டமைப்பின் முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேரதலில் போட்டியிடுவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கு. இடையிலான ஆசனப் பங்கீடு குறித்த பேச்சுக்களின் போது இறுதி முடிவு எட்டப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று மாலை நடந்த பேச்சுக்களை அடுத்தே இந்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் இந்தப் பேச்சுக்களில் பங்கெடுத்திருந்தனர்.

எமக்கு கிடைத்த தகவல்களின்படி

19 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் மின்சார அலுவலகம்



## முழு முயற்சி செய்தவர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் வடமாகாண அலுவலகம் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெரு முயற்சியினாலேயே யாழ்ப்பாணத்தில் மிக பிரமாண்டமாகவும் அழகாகவும் அமைக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

யாழ் பழைய பூங்கா வளாகத்தில் மின்சார சபையின் வடமாகாண அலுவலக கட்டடத்தை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மின்சார சபையின் வடபகுதிக்கான பிரதான மின் மார்க்கம் பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட நிலையில் வடபகுதி மக்களின் மின் தேவை பூர்த்தியாக்கப்படாது பகுதியளவிலேயே சேவை கிடைத்தது. எனினும் சுன்னாகம்

19 ஆம் பக்கம் பார்க்க

# அமெரிக்க குடியுரிமையை துறக்க முடிவு



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ அமெரிக்க குடியுரிமையைக் கைவிடுவதற்கு முடிவு செய்துள்ளார். இது தொடர்பான ஆவணங்களை தாம் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திடம் கையளித்துள்ளதாக கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வின் விசாரணை அறிக்கையில், கோத்தாபய ராஜபக்ஷ உள்ளிட்ட 40 அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே அவர் அமெரிக்க குடியுரிமையைக்

19 ஆம் பக்கம் பார்க்க

# அதிகரிக்கிறது வாக்களிப்பு நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)


நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின்போது யாழ். தேர்தல் மாவட்டத்தில் இம்முறை வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்குமென யாழ். அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான நா.வேதநாயகன் தெரிவித்தார்.

செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை குடும்பங்கள் பலவும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன. உதாரணமாக வலி. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இம்முறை வாக்களிப்புக்காக வாக்களிப்பு

19 ஆம் பக்கம் பார்க்க

# ஜி.எஸ்.பி. சலுகை இனி கிடைக்கும்



கடந்த ஆட்சியின் போது இழக்கப்பட்டிருந்த ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்கும் ஐரோப்பிய ஒன்றிய ஆவணத்தில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கைச்சாத்திட்டுள்ளார். இந்தத் தகவலை வெளிவிவகார பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள ஆடை ஏற்றுமதி நிறுவனங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்டு வந்த இந்த வரிச்சலுகை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின்போது இரத்துச்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனநாயகப் போராளிகளுக்கு

# தேர்தலில் வாய்ப்பு வழங்க மறுப்பு

(கொழும்பு)


எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் போராளிகளின் புதிய அமைப்பான, ஜனநாயகப் போராளிகள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு போட்டியிட வாய்ப்பளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடன், முன்னாள் போராளிகளின் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ந.வித்தியாதரன் தலைமையிலான குழுவினர் நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிந்துள்ளன.

இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம்

19 ஆம் பக்கம் பார்க்க







# சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைவிற்கு மின்சார சபை காரணம் இல்லை

## மின்சக்தி அமைச்சர் சம்பிக்க யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் நிலத்தடி நீர் மாசடைந்தமைக்கு மின்சார சபை பொறுப்பல்ல. கிருமி நாசினியின் அதிகப் பாவனையே காரணமாகலாம் என மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்று தெரிவித்தார்.

மின்சார சபையின் வட மாகாண அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில், நான் கடந்த 2010ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் விவசாயிகள் கிருமி நாசினி பாவிப்பதைக் க்ண்டு வினாவியபோது இது விவசாயத்தின் தேவையென அவர்கள் கூறினர். இவ்வாறான கிருமி நாசினியின் அதிகளவான பாவனையே இன்றைய நிலத்தடி நீர் மாசடைதலுக்கு காரணமாக இருக்கலாம். அதைவிடுத்து நிலத்தடி நீர் மாசடைதலுக்கு மின்சார சபை பொறுப்பல்ல. கழிவு ஓயில் கலந்ததாக கூறுவதற்கு தற்போது பரிசோதனைகள் நடக்கின்றன.

அதன் முடிவுகள் கிடைத்த பின்பே அதைப் பற்றி ஆராய்வு செய்ய முடியும். ஆனால், அவ்வாறு அக்காலத்தில் டீசல் நீருடன் கலந்திருக்க முடியாது என நான் உறுதியாக கூறுகின்றேன்.

இது குறித்து ஆராய்ச்சி செய்பவர்கள் கூறுகின்றார்கள். இது கிருமிநாசினியால் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் மனிதருக்கு பெரிய விளைவுகள் ஏற்படுகின்றன. அவ்வாறான பிரச்சினைகள் இருக்குமானால் அதற்கான நடவடிக்கைகளை தாம் ஆராய்ச்சிகளின் பின்னர் எடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(இ)

# யாழில் மின்சார சபையின் காரியாலயம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் வடமாகாண காரியாலயத்தின் புதிய கட்டடம் நேற்று கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

யாழ். பழைய பூங்கா வளாகத்தில் ஐந்து மாடிகளைக் கொண்ட நவீன வசதிகளைக் கொண்ட இந்த பிரமாண்டமான கட்டத்தை மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்றுக் காலை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதி அமைச்சர் பாலித ரங்கே பண்டார மின்சார சபைத் தலைவர் ஏ.எஸ். விஜயபால, வடமாகாண ஆளுநர் பள்ளிக்கார, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டதுடன் மின்சார சபையின் நிர்வாக உயர் அதிகாரிகள், அரச திணைக்கள உயர் அதிகாரிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். தமிழர் கலை நாட்டியத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட அமைச்சர் மற்றும் விருந்தினர்கள் ஆரத்தி எடுத்து வரவேற்கப்பட்டதுடன் ஆலய வழிபாட்டிலும் ஈடுபட்டதுடன் தேசிய கொடி மற்றும் வடமாகாண கொடி, மின்சார சபையின் கொடியேற்றலுடன் பெயர்ப்பலகை திறப்பும் இடம்பெற்றதுடன் அமைச்சர் மற்றும் விருந்தினர்கள் நாடாவை வெட்டி இக்கட்டடத்தை திறந்து வைத்தனர்.

கலை நிகழ்வுடன் ஆரம்பமான திறப்பு விழா நிகழ்வு கட்டடத்தின் ஐந்தாம் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இதில் அமைச்சர் உட்பட விருந்தினர்கள் பலரும் உரை நிகழ்த்தியதுடன் வடமாகாண மின் பொறியியலாளர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். (இ)

## கலிங்கம் சஞ்சிகை வெளியீடு

(குருநகர்)

யாழ். 'ஏய்ட்' தொண்டு நிறுவனத்தால் வெளியிடப்படும் 'கலிங்கம்' சஞ்சிகையின்ட 9ஆவது பரணி இதழ் வெளிவந்துள்ளது. இச் சஞ்சிகையின் விற்பனை மூலம் சேகரிக்கப்படும் நிதி வசதி குறைந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. 60 பக்கங்கள், நால் வண்ணச் சஞ்சிகையாக மலர்ந்துள்ள இதழின் விலை ஒன்று 80 ரூபா அறவிடப்படுவதோடு, இவ்விதழில் சோழர்களின் மலைக்க வைத்த மாவீரம், யாழ்ப் பாணத்தையும் அச்சுறுத்தும் எச்.ஐ.வி., யார் இந்த ஐ.எஸ்.ஐ.எஸ். சேகுவோரா அறிவியலும் சவால்களும் போன்ற இன்னும் பல கட்டுரைகளும் சிரிக்கச் சிரிக்க சிரிப்பு நகைச்சுவை, ஒரு பக்கக் கை போன்ற பல பயன்தரும் விடயங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளமை குற்ப்பிடத்தக்கது. (68)

# அதிபர் இடமாற்றம்; மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அதிபரின் இடமாற்றத்தை ஆட்சேபித்து பெற்றோர்களும், மாணவர்களும் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இக்கல்லூரி மாணவர்களின் கடந்த கால கல்வி முன்னேற்றத்தில் அவர் ஆற்றிய சிறந்த பணிகளைக் கவனத்திற் கொண்டும் அதிபரை இடமாற்ற வேண்டாமெனக் கோரி இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து அக்கல்லூரிக்கு விஜயம் செய்த வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர், பொதுத் தேர்தல் வரை இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும் இந்த ஆர்ப்பாட்டத்தை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டதை அடுத்து மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை கைவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.(18)

# மழை நீர் செல்லத் தடை அச்சுவேலி மக்கள் அசௌகரியம்

(அச்சுவேலி)

மழைக் காலங்களில் கடலுக்குச் செல்லும் மழை நீர் தடைப்படுவதால் அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த சுமார் 2000 குடும்பங்கள் வெள்ளப் பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றனர்.

அச்சுவேலி தெற்கு கிழக்கு வெளிப் பகுதியில் பருக்கு வெட்டி, ஒலுகடல் நீரேரிக்குச் செல்லும் வெள்ள வாய்க்கால் அடைபட்டதன் காரணமாகவே இப்பாதிப்பை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இக்கடற்கரையோரத்தை அண்டியதாக பொற்பட்டை என அழைக்கப்படும் பற்றைக் காடுகள் வளர்ந்ததில் இவற்றை அண்டியதாக காற்றில் அடித்துச் செல்லப்படும் மணல், மேடாக உயர்ந்ததில் இந்த மழை, நீர் வாய்க்கால் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெள்ள நீர் வாய்க்கால் தூர்ந்து பல பருடங்களாகி விட்டன. சிறிய மழை பெய்தாலும் எமது குடியிருப்புக்களில் மழை நீர் தேங்கிவிடுவதாக கலாநிதி சனசமூக நிலையத்தின் பொருளாளர் கதிரன் செல்வநாதன் தெரிவித்தார்

குடாநாட்டில் பெய்யும் மழை நீரில் பெரும்பகுதி எமது பிரதேசத்தின் ஊடாக தெண்டைமானாறு கடற்பகுதியை சென்றடைகின்றது. இந்த இடத்திலேயே பற்றைக் காடுகளை அண்டி கடற்கரையில் மணல் மேடுகள் உருவாகியுள்ளத்ாகவும்,

இப்போது இந்தப் பற்றைக் காடுகளுடன் கூடவே மணல் மேடுகளும் உயர்ந்துவிட்டன. மழை நீர் இப்போது கடலுக்குச் செல்லும் வாய்ப்புகள் முற்றாக தடைப்பட்டுள்ளதாக அவர் கூறியதோடு சுற்றுச் சூழல் அதிகார சபையும், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையும் இதனைக் கவனத்திலெடுத்து இங்குள்ள மக்கள் எதிர்கொள்ளும் வெள்ள நீர் பாதிப்பை தவிர்க்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (168)

## வேலை வாய்ப்பற்றோர் பதிவு

மனித வலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் வேலை வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கான பதிவுகள் நாளை மறுதினம் வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெறவுள்ளது.

காலை 9.00 மணி முதல் மாலை 4.15 மணி வரை இடம் பெறும் இப்பதிவுகள், கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபம், ஆவரங்கால் சிவசக்தி மண்டபம், அச்சுவேலி கலாமினி மண்டபம், ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளதோடு, இதில் இப்பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர்-யுவதிகளை பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பேருந்துகளுக்கான நேர அட்டவணையை வழங்காவிடின் பணிப்பகிஷ்கரிப்பில் குதிப்போம்

## பேருந்து சங்க நிர்வாகத்தினர் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்கான இணைந்த நேர அட்டவணை உரிய காலத்தில் வழங்கப்படாவிட்டால், ஐந்து மாவட்டங்களிலும் பணிப்பகிஷ்கரிப்புக்களில் ஈடுபடப்போவதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்கான இணைந்த நேர அட்டவணையை தயாரித்து அதன படி சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வடகரு மாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்க நிர்வாகத்தினர், இலங்கை போக்குவரத்துச்சபை சாலை முகாமையாளர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் தனியார் பேருந்துகளுக்கான இணைந்த சேவைக்கான நேர அட்டவணைகள் வழங்கப்படாமையினால் இரு சேவைகளுக்குமிடையில் அடிக்கடி பிணக்குகள் எற்படுகின்றமை தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் பக்கச்சார்பின்றி செயற்படும் வகையில் குழு ஒன்றினை நியமித்து அதன் மூலம் தீர்மானங்களை எடுத்து மக்களுக்கான சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சேவை நோக்கோடு மேற்கொள்ளப்படும் இச்சேவைகள் மக்களை பாதிக்காத வகையில் வழங்கப்படவேண்டும் எனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

'யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு கடனடிப்படையில் பேருந்துகளை கொள்வனவு செய்து பெரும் சிரமங்களின் மத்தியில் சேவையை வழங்கி வருகின்ற நிலையில் தமக்கான நேர அட்டவணைகளை தயாரித்து வழங்குவதிலோ அல்லது உரிய சேவைகளை வழங்குவதற்கோ தமக்கான ஏற்பாடுகள் எவையும் செய்யப்படவில்லை.

இந்த நிலை தொடருமாக இருந்தால் ஐந்து மாவட்டங்களின் தனியார் பேருந்துகளும் பணிப்பகிஷ்கரிப்பு செய்யவுள்ளோம் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# சிவனருள் இல்லத்தின் 10 ஆவது ஆண்டு நிகழ்வுகள்

மன்னார் திருக்கேதீஸ்வரம் சிவனருள் இல்லத்தின் 10 ஆவது ஆண்டு விழா நிகழ்வு எஸ்.ரி.ஆர் கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி சிவனருள் இல்ல அறக்கட்டளை நிதியத்தின் நிறுவுனர்களான கலாநிதி ஜெ.நமசிவாயம், திருமதி மஞ்சுளா நமசிவாயம் ஆகியோர் தலைமையில் நடைபெறும்.

காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறும் இவ் ஆண்டுவிழா நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்தின் தலைவர் சி. கணேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

தலைமையுரையைத் தொடர்ந்து சிவனருள் இல்ல சிறார்களின் உரை, கவிதை, பொம்மலாட்டத்தைத் தொடர்ந்து மட்டக்களப்பு கறுவாஞ்சிக்குடி மகளிர் இல்லதின் சிறப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இதனை அடுத்து மாலையில் இடம்பெறும் நிகழ்வுகள் அறக்கட்டளை நிதியத்தின் உறுப்பினர் சுரேன் சொர்ணலிங்கம் தலைமையில் ஆரம்பமாகும்.

மன்னார் அரச அதிபர் பிரதம விருந்தினராகராக கலந்து கொள்ளும் இந் நிகழ்வில் சிறார்களின் இல்லக் கீதம், வரவேற்புரையைத் தொடர்ந்து தனிநடனம், பாடல், உரைகளும் இடம்பெறும்.

மறுநாள் 12 ஆம் திகதிய காலை அமர்வுகள் நவாலியூர் சோம சுந்தரப் புலவர் அரங்கில் கலாநிதி ஜெயமோகன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இதில் சிவனருள் தொழிற் பயிற்சி நிலையப் பணியாளர்களின் சிறப்பு நிகழ்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் மன்னார் அண்ணை இல்ல சிறார்களின் நாடகமும் திருமதி கிருஷ்ணானந்தம் விஜயலக்ஷ்மி அம்பலவாணரின் இசை விருந்துக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# காஸ் சிலிண்டர் வெடித்ததில் குளிர்பானக் கடை தீக்கிரை



(வவுனியா)

வவுனியாவில் உள்ள குளிர் பானக்கடை ஒன்றில் காஸ்சிலிண்டர் வெடித்துச் சிதறியதில் குறித்த கடை பெரும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது கடந்த சனிக்கிழமை பி.ப4.25 மணியவில் வவுனியா குருமண்காட்டு சந்தியில் உள்ள குறித்த குளிர்பானக் கடையில் சமைப்பதற்கு பயன் படுத்தப்பட்டிருந்த காஸ் சிலிண்டர் திடீரென தீப்பற்றியது எனினும் அங்கிருந்த பொதுமக்கள், பணியாளர்கள் காயம் எதுவும் இன்றி காப்பாற்றப்பட்டனர்.

கடை தீப்பற்றியதில் ஒரு இலட்சம் பெறுமதியான உணவுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் சேதமடைந்துள்ளதாக குறத்த கடை உரிமையாளர் தெரிவுத்துள்ளார்.

# 50 வருட சேவை ஆசிரியருக்கு சேவை நலன் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கில் 50 வருட ஆசிரியர் சேவையை வினைத்திறனாக மேற்கொண்ட ஆசிரியை செல்வி லீலாவதி மாரிமுத்துக்கு வலி.மேற்கு சமூகம் திரண்டு பொன் விழா எடுக்கவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை சித்தன் கேணி மாதர் சங்க பாலர்பாடசாலை முகாமைத்துவக் குழுத் தலைவி திருமதி வாசுகி உமாபதி சர்மா மேற்கொண்டுள்ளார்.

மேற்படி பொன்விழா தொடர்பாக முகாமைத்துவக் குழுத் தலைவி திருமதி வாசுகி உமாபதி சர்மா மேலும் தெரிவிக்கையில்,

முன்பள்ளி ஆசிரியர் சேவையில் எவரும் 50 வருடங்களை பூர்த்தி செய்ததாக வரலாறு இல்லை.

ஆனால் வலி.மேற்கில் சித்தன கேணி மாதர் சங்க பாலர் பாடசாலை பொறுப்பாசிரியர் செல்வி லீலாவதி மாரிமுத்து தொடர்ச்சியாக 50 வருட ஆசிரியர் சேவையை முன்னிறுத்தி மிகச் சிறந்த சேவையை சமூகத்திற்கு ஆற்றியுள்ளார்.

இவரது சேவையை கௌரவிக்கும் முகமாக வலி. மேற்கில் உள்ள சகலரது ஒத்துழைப்புடன் 50 ஆவது பொன்விழாவினை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

பொன்விழாக்காணும் முன் பள்ளி ஆசிரியை செல்வி லீலாவதி மாரிமுத்து இதுவரை 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்விப் போதனை வழங்கி சாதனை படைத்துள்ளார்.

இவரது சிறந்த போதனைக்காக வீணாகான நிறுவனத் தலைவர் மாநகர விருது சாதனையாளர் சிவஸ்ரீ சபா. வசுதேவ குருக்கள் "ஞானரத்தினம்" என்னும் உயர் விருதினை வழங்கி கௌரவித்துள்ளார். வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் வலி.மேற்கின் சிறந்த ஆசிரியருக்கான கௌர்வ விருதினை ஆசிரியை செல்வி லீலாவதி மாரிமுத்துவுக்கு வழங்கி கௌரவித்துள்ளார்.

விரைவில் பொன்விழாக் கண்ட ஆசிரியை செல்வி லீலாவதி மாரிமுத்துவின் சேவையை பாராட்டி பொன்விழா மலர் வெளியிட்டு விழா எடுக்கப்படும் என முகாமைத்துவக் குழுத் தலைவி திருமதி வாசுகி உமாபதி சர்மா தெரிவித்துள்ளார். (92)

# தோட்டப் பகுதிகளில் "கப்ளிங்" குகள் திருட்டு

(மருதனார்மடம்)

மருதனார்மடம் பகுதியில் உள்ள தோட்டப்பகுதிகளில் நீரிறைக்கப் பயன்படும் "கப்ளிங்" மற்றும் மோட்டார் என்பனவறறை திருடர்கள் திருடச் சென்றுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

விவசாய நிலங்களில் மின் சாரம எடுத்து நீரிறைப்பை மேற்கொள்ளும் விவசாயிகள் மோட்டார் மறறும் நீரிறைக்கும் "பைப்"புகளை வைப்பதற்கு அறையொன்றை கட்டி அவற்றை இதற்குள் வைத்தள்ளனர். இந்த அறைக்கதவுகளை உடைத்து திருடர்கள் அங்கிருந்த நீரிறைக்கும் மோட்டார் மற்றும் "பைப்"புகளிலுள்ள கப்ளிங்குகளை உடைத்துக் கொண்டு சென்றுள்ளனர். இதனால் பயிர்களுக்கு நீரிறைப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

பித்தளையினாலேயே குறித்த கப்ளிங் செய்யப்பட்டுள்ளது. தற்போது யாழில் பித்தளைக்கு அதிக கிராக்கி உள்ள நிலையிலேயே திருடர்கள் "கப்ளிங்"குகளில் தமது கை வரிசையை காட்டத் தொடங்கியுள்ளனர்.

# அலங்கார உற்சவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் அருள் மிகு ஸ்ரீ சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றைய தினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது.

இவ் வருடாந்த அலங்கார உற்சவத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜையும் இடம்பெறவுள்ளது.




அல் பாக்கியாதுஷ்ஷா லிஹாத் பௌன்டேசனினால் நடாத்தப்பட்ட ரமழான் புனித அல்குர்ஆன் பரிசுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் கதீஜா பெண்கள் பாடசாலை அதிபர் மாணவர்களுக்கு பரிசு வழங்குவதையும், உலமாக்கள் கௌரவிப்பும் இடம்பெற்றதையும் காணலாம். (105)

எதிரி பலமாகி விட்டான் என்பதை அறிந்தும்
நீ பலமாகா விட்டால் அது உனது பலவீனமே.
–போதிபுரக்கவிராயர் –

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தொடர்ந்து ‘சுத்துப்படும்’ தமிழர்கள்!

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் ஆரம்ப தினமான நேற்று, குடாநாட்டுப் பத்திரிகைகளில் வந்த சில செய்தித் தலைப்புகளைப் பார்த்தால், தமிழ் மக்களை போலி அறிக்கைகளால் ஏமாற்றி வருபவர்களுக்கு இந்தத் தேர்தலில் சொல்ல புதிய உத்திகள் எதுவும் கிடைக்கவில்லை என்றே தெரிகிறது.

**“எமது மக்கள் தோற்றுப் போனவர்கள் அல்ல; எமது மக்களால் தான் மகிந்த தோற்றுப் போனார் – தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா”** இது ஒரு செய்தி.

அப்படியானால் மகிந்த கடந்த தேர்தலில் தோற்றுப் போய் மைத்திரியும் ரணிலும் பதவிக்கு வந்ததுதான் எங்களுடைய வெற்றி என்று தமிழ் மக்கள் திருப்தியடைந்து இருந்துவிட வேண்டியதுதானா?

தமிழ் மக்கள் இதுகாலவரை பட்ட கஷ்டங்களுக்கான நிவாரணமும் வெற்றியும் இனப்பிரச்சினைத் தீர்வைப் பெற்றுக்கொள்வது இல்லையா? தீர்வு அம்போ போலத்தான் தெரிகிறது. அடுத்த தலைவர் சொல்வதைப் பாருங்கள்:

**“உலகில் எம்மை அடையாளப்படுத்த வெற்றி மீதான நம்பிக்கை அவசியம் – முன்னாள் பாராளுமன்ற உறுப்பி னர் சிறீதரன் தெரிவிப்பு”**

அட, அவர்கள் எம்பிக்கள் ஆவதைத்தான் ‘வெற்றி’ என்று இந்தத் தேர்தலுக்கும் சொல்கிறார்கள். இதுவரை பெற்ற வெற்றிகளாலும் பதவிகளாலும் உலகத்துக்கு எம்மை அடையாளப்படுத்த முடியாமல் போய்விட்டதா? ஏன்? சரி, இனிமேல் அடையாளப்படுத்தி என்ன சாதிப்பீர்கள் என்பதையாவது விளங்கப்படுத்திச் சொல்ல முடியுமா?

**“நிரந்தர அரசியல் தீர்வை நோக்கி நகர்வதே கூட்ட மைப்பின் நிலைப்பாடு – முன்னாள் பாராளுமன்ற உறுப்பி னர் சுமந்திரன் தெரிவிப்பு”**

கடந்த ஆறு வருடங்களாக நடந்த நாலைந்து தேர்தல்களில் சொல்லியபடி தீர்வுக்காக எத்தனை அங்குலங்கள் இதுவரை நகர்ந்திருக்கிறீர்கள்? இனிமேலும் எந்தத் தடத்தைப் பிடித்துக் கொண்டு நகர்வீர்கள் என்பதைச் சொல்லவேயில்லையே!

**“நம்மிடம் தற்போதுள்ளது ஜனநாயக பலம் மட்டுமே; அதனை சரியான முறையில் பயன்படுத்துவதுதான் எதிர்காலத்துக்கான அத்திவாரம் – முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்”**

இதற்கு என்ன சொல்ல? இந்தத் தேர்தலிலும் தமிழ் மக்கள் இவர்களை வெல்ல வைத்தால்தான் அத்திவாரத்தையே போட ஆரம்பிக்கப் போகிறார்கள். இதுவரை காலமும் தமிழ் மக்களின் தலைகளுக்கு மேலே கட்டிக்கொண்டிருந்த ‘பில்டிங்’குகளெல்லாம் ‘பேஸ்மென்டே’ இல்லாமல்தானா?

**“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேரம் பேசும் சக்தியை அதிகரிக்க வேண்டும் – கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துரைரெட்ணம்”**

இது எதுக்குத் தோழர்? இதுவரைக்கும் கிடைத்த எம்பிக்கள் காணாததாலா உங்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை? இன்னும் எவ்வளவு அதிகரிக்க வேண்டும்? ஒருவேளை 225 ‘சீற்’றும் எடுக்க வேண்டுமா?

இப்படித்தான் ‘சுத்துப்பட்டு’க் கொண்டிருக்கிறார்கள் தமிழ் மக்கள். இப்போது மட்டுமல்ல, அடுத்த தேர்தல் வரும்போதும் இப்படியேதான் தமிழ் மக்களுக்குப் பூ வைத்துக் கொண்டிருப்பார்கள் இவர்கள்!

கூட்டமைப்பு எம்பிக்களும் மாகாணசபை உறுப்பினர்களும் தனிப்பட தங்களுக்கான வாகனங்கள் மற்றும் சலுகைகளை அரசிடம் விண்ணப்பித்து வாங்கிக் கொள்கிறார்கள். தனிப்படப் போய் தொகுதி அபிவிருத்திக்கென்று அரசிடம் பெருந்தொகைப் பணத்தை வாங்கிக் கொள்கிறார்கள்...

ஆனால் மக்களுக்கான தீர்வுக்கு அரசிடம் பேசவேண்டும் என்று வரும்போது மட்டும் “சிங்கள அரசாங்கங்கள் தமிழருக்கு எதையுமே தராது” என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் இந்தத் ‘தமிழ்ப் பிரதிநிதிகள்’!

- ஆசிரியர்

# வீதி அபிவிருத்தியில் முறைகேடு
# கிளர்ந்தெழுந்த அளவெட்டி மக்கள்

(யாழ்ப்பாணம்)

முறைகேடாக இடம்பெற்ற வீதி அபிவிருத்திப் பணிகளை யாழ். உள்ளூராட்சி ஆணையாளர் நேரடியாக தலையிட்டு இடை நிறுத்திய சம்பவமொன்று தெல்லிப்பளை, அளவெட்டி கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

வீதிக்காக கற்களை பதிக்கவென பயன்படுத்த பொருத்தமான உருளையைப் பயன்படுத்தாது சிறிய ரக உருளை இயந்திரம் கொண்டு வீதிகளை செப்பனிட முயற்சித்ததை அடுத்தே இந்த பகுதி வீதித் திருத்தப்பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த முறைகேடான வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து, வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சுகிர்தன் சபையின் செயலாளர் அறிவரசன் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் அதனை உதாசீனம் செய்து ஒப்பந்தக்காரரின் குறைபாடான வீதி செப்பனிடும் பணியை அவர்கள் அனுமதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்திப் பணிகளை சீராக முன்னெடுக்குமாறு கோரி அளவெட்டி கிழக்கிலிருந்து பொது மக்கள் பிரதேச சபை தவிசாளரிடம் சுட்டிக் காட்ட முனைந்த போது தம்மை தவிசாளரும், செயலாளரும் அச்சுறுத்தி மிரட்ட முற்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கற்களை நெரிப்பதற்காக 8 தொன் உருளையைப்பயன்படுத்துவதற்குப் பதில் 4 தொன் உருளை இயந்திரம் பயன்படுத்தப்பட்டதில் கற்கள் முறையாகப் பதிக்கப்படாத நிலையில்இந்த வீதிகளை செப்பனிடும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த சிறிய உருளையில் கற்கள பதிக்கப்பட்ட பின்னரும் கற்களை சுலபமாக வெளியே எடுக்கும் நிலையிலேயே காணப்பட்டன.

இவ்வாறு இந்த வீதி செப்பனிடப்பட்டால் ஒரு ஆண்டு மழையைக் கூட தாக்குப் பிடிப்பது கடினமென அப்பகுதி சன சமூக நிலையத்தின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச சபை அதிகாரிகளோ,உறுப்பினர்களோ, அன்றி இந்த வேலைகளில் ஈடுபடும் ஒப்பந்தகாரர்களோ நாம்கூறுவது எதையும் காதில் போட்டுக் கொள்வதாக இல்லை.

இந்த நிலையிலேயே உள்ளூராட்சி ஆணையாளரின் கவனத்துக்கு விடயத்தைக் கொண்டு வந்து சீரற்ற இந்த வீதி செப்பனிடும் பணிகளை தாம் இடைநிறுத்தியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் வடக்கின் முதலமைச்சர், உள்ளூராட்சி ஆணையாளர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் போன்றோருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய)

# 113 ஆசனங்களைப் பெற்று மகிந்த பிரதமராவது உறுதி
## நம்பிக்கையுடன் வாசு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் 113இற்கு மேல் ஆசனங்களை பெற்று மகிந்த ராஜபக்ஷ இந்நாட்டின் பிரதமராவது நிச்சயமென முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டத்திற்கு அமைய சந்திரிக்கா, ரணில் உட்பட அனைத்துவிதமான சதிகாரர்களும் இணைந்து ஏற்படுத்திய பொறி தகர்க்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஜனநாயக ரீதியிலான மக்கள் பலத்தினால் ஏகாதிபத்தியவாதிகளின் சதித்திட்டங்களை தோல்வியடையச் செய்யலாம் என்பது இன்று உண்மை? யாக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமக்கு 107 ஆசனங்கள் கிடைக்கும் அதனோடு இடதுசாரிகளும் ஒன்றிணையும் போது 113இற்கு மேல் ஆசனங்கள் கிடைக்கும்.

இன்று தற்போதைய ஜனாதிபதியும், முன்னாள் ஜனாதிபதியும் ஓரணியில் இணைந்துள்ளனர், அத்துடன் நுகேகொடையில் ஆரம்பமான மக்கள் போராட்டம் இன்று வெற்றி கண்டுள்ளது.

தேசிய பாதுகாப்பும், சமூக நியாயத்துக்குமான மக்கள் சார்பு கொள்ளை. மைத்திரி மகிந்த ஒன்றிணைவின் மூலம் ஆகஸ்ட் 17ஆம திகதி மாபெரும் வெற்றியை பெறுவதும் என்பது நிச்சயமாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகளை சுற்றியுள்ள மக்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை மீண்டும் ஒற்றுமைப்படுத்த மேற்கொண்ட போராட்டம் வெற்றி பெற்றுள்ளது.

அத்துடன் குடும்ப ஆட்சியை நாமும் எதிர்க்கின்றோம். இன்று மைத்திரியின் ஆதரவாளர்களாக இருந்தவர்களின் முகத்திரை கிழிந்துள்ளது. எஸ்.பி.நாவின்ன ஐ.தே. கட்சியுடன் இணைந்து விட்டார். எதிர்காலத்தில் மேலும் பலர் ஐ.தே.கட்சியுடன் இணைந்து கொள்வார்கள்.

மைத்திரியுடன் இருந்தாலும் இவர்களின் ஆதரவு ஐ.தே.கட்சியிடமே இருந்தது. எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எமது அணி சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளதாகவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# ஊழல்வாதிகளுக்கு வேட்பு மனு ஐ.தே.க.விற்கு பிரச்சினையே இல்லை
## அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதால் ஜனாதிபதி தரப்பில் ஊழல்வாதிகளுக்கு வேட்பு மனு வழங்கப்படுவது குறித்து தமக்கு பிரச்சினை இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர், அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் 11 ஆம் திகதி கட்சியின் மாநாடு கொழும்பில் இடம்பெறவுள்ளதாகவும் அதன்பின் 14ஆம் திகதி கண்டியில் தேர்தல் பிரசாரம் ஆரம்பிக்கப்படும் என்றும் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

இம்முறை தேர்தலில் அரச சொத்துக்கள் பயன்படுத்தப்பட மாட்டாதெனவும் அதன்மூலம் முன்னாள் அரசாங்கத்திற்கும் இன்னாள் அரசாங்கத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை புரிந்து கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தில அரச ஊழியர்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும் எத்தனோல் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ள குற்றச்சாட்டை நிராகரிப்பதாக அவர் கூறினார்.

எனினும் கடந்த ஆட்சிக் காலத்தில் அதிகாரிகள், அரசியல்வாதிகள் தவறு செய்ய துணை போன அரச ஊழியர்களிடம் வாக்கு மூலம் பெறப்படுவதாகவும் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

# மகிந்தவின் தவறுகளை மைத்திரியும் செய்கிறார்
## தெற்கில் கிளம்பும் கண்டனம்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தினால் செய்த அதே தவறுகளை தற்போதைய அரசாங்கமும் செய்துக்கொண்டிருப்பதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் புதிய நியமனங்களை வழங்கல், பதவி உயர்வு, இடமாற்றம் போன்ற செயற்பாடுகள் கடந்த அரசாங்கத்தின் போது முன்னனெடுக்கப்பட்டது. அதேபோன்ற இந்த அரசாங்கமும் செய்துக்கொண்டிருக்கின்றது.


இதன்படி இந்த விடயம் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிடவுள்ளதாக ரோகன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

# அம்மாவின் பார்வையில் இணையத்தளங்கள்

**நாவலோ**, சிறுகதையோ ஒரு இலக்கியப் படைப்பை எடைபோட்டு மதிப்பீடு செய்வதில் வாசகனுக்கு எந்த அளவு செல்வாக்கு இருக்கிறது என்று தெரியவில்லை. அது முழுக்க முழுக்க இலக்கிய விமர்சகர்களின் சொத்து. அதேபோல ஒரு திரைப் படத்தை ஆய்வு செய்வதில் ரசிகனின் பங்கு எந்த அளவு இருக்கிறது என்றும் தெரியவில்லை. ஆனால் இணையத்தளங்கள் என்று வரும் போது பயனாளிகளின் கை தான் ஓங்கியிருக்கிறது தெரியுமா?

ஆமாம், பயனாளிகளை முக்கியமாக கருதாத இணையத்தளங்கள் வெற்றி பெற முடியாது என்பதுதான் விஷயம். அதனால்தான் இணையத் தளங்களுக்கான இலக்கணம் முழுவதும் பயனாளிகள் அனுபவத் தைச் சார்ந்திருக்கிறது.

இணையத்தளங்களை எவ்வாறு பயன் படுத்துகிறோம் என்பதை இணையவாசி கள் அறியாமலே கூட இருக்கலாம். ஆனால் அவர்கள் பயன்படுத்தும் விதம்தான் பல தளங்களின் வெற்றி தோல்வியை தீர்மானிக்கின்றன. எனவே இணையத்தைப் பொறுத்த வரை பயனாளி தான் ராஜா. சந்தேகம் இருந்தால் இணைய அம்மாவின் தளத்துக்குச் சென்று பாருங்கள்!




### அம்மாதான் பயனாளி

யார் இந்த இணைய அம்மா? அவர் என்ன செய்கிறார் என்று தெரிந்து கொண்டால் ஆச்சர்யமாக இருக்கும். இந்த இணைய அம்மா, இணையத்தளங்களை விமர்சனம் செய்து தனது தீர்ப்பை வழங்குகிறார். சும்மாயில்லை, இணையத்தளங்கள் கட்டணம் செலுத்தி அவர் சொல் வதைக் கேட்கத் தயாராக இருக்கின்றன.

தி யூசர் ஈஸ் மை மாம் இதுதான் இணைய அம்மாவின் இருப்பிடம். இங்கிருந்துதான் அவர் தளங்களை விமர்சனம் செய்கிறார். இணையத் தளத்தை மதிப்பிட விரும்பும் நிறு வனங்கள் 75 டொலர் கட்டணம் செலுத்த வேண்டும். அதன் பிறகு இணைய அம்மா அந்தத் தளத்தைப் பயன்படுத்திப் பார்த்து அது எப்படி இருக்கிறது என மதிப்பீடு செய்வார்.

இணையத்தள விமர்சனம் என்பதைக் கூட புரிந்து கொள்ளலாம். ஆனால் கட்டணம் செலுத்தி அதைக் கேட்கத் தயாராகி இருப்பது வியப்பாக இருக்க லாம். அதிலும் வல்லுநர்களின் விமர் சனம் என்றால் கூட பரவாயில்லை, ஆனால் அம்மாவின் விமர்சனத்துக்கு இத்தனை மவுசா என்ற கேள்வியும் எழலாம்.




ஆனால் இணையப் பயன்பாட்டைப் பொறுத்தவரை அம்மாக்கள்தான் உண்மையான நக்கீரன்! அவர்களின் கருத்துகள் முக்கியமானவை. பொருட் படுத்த வேண்டியவை. இதைப் புரிந்து கொள்ளாமல் போனால் இழப்பு அம்மாக்களுக்கு அல்ல, அவர்களை அலட்சியம் செய்யும் இணையத்தளங் களுக்குத்தான்!

அதாவது, இணையத்தளங்களுக்கான இலக்கணத்தில் பயன்பாட்டுத் தன் மைக்குத்தான் முதலிடம். வடிவமைப்பு, உள்ளடக்கம், தோற்றம் எல்லாம் அதன் பிறகுதான்.

பயன்பாடு என்று வரும்போது இணையத்தளம் அடிப்படையில் எளிமையாக இருக்க வேண்டும் என் பதுதான் பொன் விதி. இதைப் புரி யும் வகையில் சொல்வதற்காகத்தான், ஒரு நல்ல இணையத்தளம் உங்கள் அம்மாக்களால் எளிதாகப் பயன்படுத் தும் வகையில் இருக்க வேண்டும் என்று சொல்கின்றனர். இதன் பொருள், அம்மாக்களைப் பயனாளியாக மனத் தில் கொண்டு இணையத்தளங்களை உருவாக்கினால் அது எல்லோரும் பயன்படுத்தும் வகையில் இருக்கும்!

### எளிமையே எல்லாம்

ஒரு இணையத்தளம், வல்லுநர்களும் வடிவமைப்பாளர்களும் போற்றும் தளமாக இருப்பதால் பயனில்லை. அது பயனாளிகளைக் கவரும் தளமாக அது இருக்க வேண்டும். அதுவே நல்ல இணையத்தளமாக கொள்ளப்படு கிறது. பயனாளிகளின் பிரதிநிதிகளாக அப்பாவி அம்மாக்கள் கருதப்படுகின்ற னர். அதனால்தான் அம்மாக்களுக்குப் புரியும் வகையில் இணையத்தளம் இருக்க வேண்டும் என்கின்றனர்.

அதாவது இணையத்தளத்தின் உள் ளடக்கம் எல்லாத் தரப்பினராலும் சுலபமாகப் பயன்படுத்தும் வகை யில் இருக்க வேண்டும். தளத்தின் எந்தப் பகுதியும் எந்தச் சேவையும் குழப்பத்தைத் தரக்கூடாது. தடுமாற வைக்கக் கூடாது. நாடி வருபவருக்கு என்ன தேவையோ அதை பளிசென அடையாளம் கொண்டு சில கிளிக் குகளில் தேடி அடையும் வகையில் இருக்க வேண்டும். (ஒற்றை கிளிக்கில் கிடைத்தால் இன்னும் விசேஷம்).

இணையத்தளம் எதற்கானது என்ற தெளிவின்மையையோ அல்லது அதில் என்ன எல்லாம் இருக்கின்றன என்று புரியாத சிக்கலான தன்மையோ இருந் தால் அந்தத் தளம் பயன்பாட்டு நோக் கிலானது அல்ல என்று பொருள். இதற் கான தண்டனை என்ன தெரியுமா? பய னாளிகள் சில கிளிக்குகளில் ஏமாற்றம் அடைந்து வெளியேறிவிடுவார்கள்.

எனவேதான் அடிப்படையில் இணை யத்தளம் எளிமையாக இருக்க வேண் டும் என்கின்றனர்.

**இணையத்தளம் அடிப்படையில் எளிமையாக இருக்க வேண்டும் என்பதுதான் பொன் விதி. இதைப் புரியும் வகையில் சொல்வதற்காகத்தான், ஒரு நல்ல இணையத்தளம் உங்கள் அம்மாக்களால் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் இருக்க வேண்டும் என்று சொல்கின்றனர். இதன் பொருள், அம்மாக்களைப் பயனாளியாக மனத்தில் கொண்டு இணையத்தளங்களை உருவாக்கினால் அது எல்லோரும் பயன்படுத்தும் வகையில் இருக்கும்!**

சைபர்சிம்மன்

### ஆடம்பர வடிவமைப்பு ஏன்?

இணைய நிறுவனங்கள் மட்டும் அல்லா மல் இணைய வடிவமைப்பாளர்களும்கூட இந்த இணைய அடிப்படையைப் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றனர். இணையத்தளம் கவரும் வகையில் இருக்க வேண்டும் என்பதற்காக அதற்கு கிராபிக்ஸ் அலங்காரம் செய் கின்றனர். பிளாஷ் சொ.'.ப்ட்வெயரால் பளிச்சிட வைக்கின்றனர். தோற்றத்தில் மயங்க வைக்க முற்படுகின்றனர்.

ஆனால் ஐயோ பாவம், அது பயன் படுத்தும் வகையில் இருக்க வேண் டும் என்பதை மறந்து விடுகின்றனர். விளைவு, பயனாளிகள் குழப்ப மடைந்து ஓட்டமெடுக்கின்றனர்.

இங்கு தேடியந்திரமான கூகுளைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். கூகுள் முன்னணி தேடியந்திரமாக இருப்பதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கின்றன. ஆனால் எல்லாவற்றை யும் விட முக்கிய காரணம் அதன் எளிமை. அதன் முகப்புப் பக்கத்தில் எந்த அலங்காரமும் இல்லை. கவனச் சிதறலும் இல்லை. தேடுவதற்காகத் தானே வந்திருக்கிறீர்கள் தேடிக் கொள்ளுங்கள் என கூகுளின் முகப்பு எளிதாக வரவேற்கிறது.

அதன் தேடல் கட்டக் கதவுகள் இணை யவாசிகள் எட்டிப்பார்த்ததுமே திறந்து கொள்கிறது.

கூகுளுக்கு விளம்பரம்தான் வருவாயை அள்ளித் தருகிறது என்றாலும் கூட முகப் புப் பக்கத்தில் அது ஒருவிளம்பரத்தை கூட வைக்கத் துணியவில்லை. இணைய வாசிகள் மீதான பயம் கலந்த மரி யாதை இது. தேடல் சேவை எளிதாக, எவரும் இனம் காணக்கூடியதாக இல்லாவிட்டால் பயனாளிகள் நாடி வரமாட்டார்கள் என்று கூகுளுக்கு நன்றாகத் தெரியும்.

### பயன்பாட்டுத்தன்மை

இணைய உலகில் இந்த அம்சங்கள் பயன்பாட்டுத் தன்மை என பிரபலமாக குறிப்பிடப்படுகின்றன. இவற்றை வலி யுறுத்தும் வல்லுநர்கள், ஒரு இணையத் தளம் பயனாளிகளைத் தடுமாற வைத் தால் அது அவர்களின் தவறு அல்ல; அந்த இணையத்தளம் வடிவமைப்பில் உள்ள பிழை என்கின்றனர். இந்த உண் மையை அழுத்தமாகச் சுட்டிக்காட் டவே அம்மாக்களைப் பயனாளிகளுக் கான உதாரணமாக கொள்கின்றனர்.

தொழில்நுட்ப விடயங்களில் கடந்த தலைமுறையினர் அதிலும் குறிப்பாக அம்மாக்கள் அதிக பரிட்சயமும் புரிதலும் இல்லாமல் இருக்கின்றனர். கம்ப்யூட்டரைப் பார்த்ததும் அம்மாக் கள் மிரண்டு ஒதுங்கலாம். மவுஸ் நகர்த்தலைக்கூட அவர்கள் கைப்பிடித்து சொல்லித்தர வேண்டியிருக்கலாம். ஆனால் இணையத்தளம் பயன்பாடு என்று வரும்போது அம்மாக்கள் கூட பயன்படுத்தும் வகையில் ஒரு தளம் இருந்துவிட்டால் அதைவிட அந்தத் தளத்துக்கு சிறந்த சான்றிதழ் வேறில்லை.

இந்தக் கருத்தைத்தான் தி யூசர் ஈஸ் யுவர் மாம் இணையத்தளம் அழகாக எடுத்து வைக்கிறது.

### குடிகாரர் பார்வையில்

இந்தத் தளத்தை ஸ்கொட்டி அலன் என்பவர் உருவாக்கி இருக்கிறார். இதன் முகப்பு பக்கத்தில், "அன்புக் குரிய இணையமே, எனது அம்மா உங்கள் அபத்தங்களால் வெறுத்துப் போயிருக்கிறார். அவரால் உங்கள் இணையத்தளங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அது அவரது பிழையும் அல்ல" என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, உங்கள் தளம் பயன்பாட்டு நோக்கில் எப்படி இருக்கிறது என்பதை என் அம்மா பயன்படுத்திப் பார்த்து விமர்சனம் செய்வார் என்றும் இந்தத்தளம் குறிப்பிடுகிறது. இணையத்தளத்தை ஸ்கிரீன்ஷொட் எடுத்து அதன் குறை நிறைகளை அம்மா விரிவாக தருவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தளத்துக்குச் சகோதர தளம் ஒன்றும் இருக்கிறது. அது இன்னமும் சுவாரசியமானது. தி யூசர் ஈஸ் ட்ரங்க் எனும் அந்தத் தளம், குடிபோதையில் பயன்படுத்தும்போது ஒரு இணையத் தளம் எப்படி இருக்கிறது என்பதை ஆய்வு செய்து சொல்வதை கட்டணச் சேவையாக வழங்குகிறது. இதை வில் லங்கம் என்றோ விநோதம் என்றோ நினக்க வேண்டாம். குடிபோதையிலும் தெளிவாகப் புரியும் படி இணையத் தளம் இருக்க வேண்டும் எனும் கருத்தை இது வலியுறுத்துகிறது.

### ஒரு கிளிக் விதி

நிற்க, இணைய வடிவமைப்பு என்பது பயனாளிகளை மையமாக கொண்டதாக இருக்க வேண்டும் என்பதே நாம் உணர வேண்டிய நீதி.

இணையப் பயன்பாடு தொடர்பான கோட்பாடுகளையும் அதன் முக்கிய அம்சங்களையும் வலியுறுத்தும் இணை யத்தளங்கள் பல இருக்கின்றன. அவற் றில் ஒன்றான யூசர் போகஸ் தளம் இணைய வடிவமைப்புக்கான 20 அடிப் படை அம்சங்களை குறிப்பிடுகிறது.

இணையத்தளத்தின் முக்கியமான தகவல், முகப்பு பக்கத்தில் இருக்க வேண்டும் அல்லது ஒரு கிளிக்கில் அடையும்படி இருக்க வேண்டும் என்பது அவற்றில் ஒன்று.

இணைய அம்மாவின் இணையத் தளம்: http://theuserismymom.com/

பயன்பாட்டு அம்ச இணையத்தளம்: http://www.userfocus.co.uk/index.html

# மகிந்த - மைத்திரி இணைவு வெட்கம் கெட்ட செயல்

## என்கிறார் வசந்த சேனநாயக்க

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணைந்திருந்தால் அது வெட்கம் கெட்டசெயலாகும் என பிரதி அமைச்சர் வசநத சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த மைத்திரி இணைந்து கொண்டதாக வெளியான தகவல்கள் பற்றி எனககுத் தெரியாது. இருவரும் இணைநது கொண்டிருந்தால் அதற்காக மகிநதவிற்கு எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

அதேபோல் இவ்வாறு வெட்கம் கெட்ட செயலை ஏன் செய்தீர்கள் என ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் கேட்கின்றேன்.

நாம் ஊருக்கு செல்லும் போது மக்கள் கேட்கின்றார்கள் இருவரும் இணைந்து கொண்டார்களா என?

ஊடகங்களில் கூறுவதனைப் போன்று மகிந்த இணைந்து கொணடிருந்தால் அவரை



குற்றம சுமத்த முடியாது, அதற்காக அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

கடந்தவாரம் மகிந்தவுடன் இணையப் போவதில்லை, வேட்பு மனு வழங்கப்படாது என ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

தேர்தல் காலத்தில் போதைப் பொருள் எதனோல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் பற்றி மைத்திரி கூறினார். மகிந்தவின் ஆட்சியில் நடக்கும் அட்டூழியங்களை தாங்கிக் கொள்ள முடியாது தாம் வெளியேறியதாக கூறியிருந்தார்.

மனிதர் என்றால் ஓர் கொள்கை இருக்க வேண்டும்.

எனினும் யார் எங்கு சேர்ந்தாலும் பிரிந்தாலும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டும் என வசந்த சேனநாயக்க பொலனறுவையில் வைத்து தெரிவித்துள்ளார்.

# குற்றவாளிகளுக்கு வேட்பு மனு வழங்காதீர்

## பௌத்த பீடாதிபதிகள் கோரிக்கை

(கொழும்பு)

குற்றச் செயல்கள், ஊழல் மோசடிகளில் ஈடுபடாதவர்களுக்கு மட்டும் அரசியல் கட்சிகள் வேட்பு மனுக்களை வ்ழங்க வேண்டுமென கண்டி அஸ்கிரி மற்றும் மல்வத்து பீடாதிபதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது நேர்மையான நாட்டுக்கு சேவையாற்றக் கூடியவர்களுக்கு மட்டும் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் அளிக்குமாறு அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தேர்தலில் போட்டியிடும் அரசியல கட்சித் தலைவர்களிடம் இரண்டு பீடாதிபதிகளும் கோரியுள்ளனர்.

குற்றச் செயல்கள் மற்றும் ஊழல் மோசடிகளில் ஈடுபடும் வேட்பாளர்களை மக்கள் நிராகரிக்க வேண்டுமெனவும் அஸ்கிரி மற்றும் மல்வத்து பீடாதிபதிகள் மக்களிடம் கோரியுள்ளனர்.

# பிரதமர் ரணிலின் தேவையை பூர்த்தி செய்யும் ஹெலஉறுமய

## உதய கம்மன்பிலவின் கண்டுபிடிப்பு



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தேவையை ஜாதிக ஹெல உறுமய கட்சி பூர்த்தி செய்து வருவதாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில குற்றம் சுமத்தியுள்ளார்.

எனினும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இந்த முயற்சியை நாட்டின் பொதுமக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி மாதம் அன்னப்பறவை சின்னத்திற்கு வாக்களித்து தாம் செய்த பிழையை உணர்ந்து கொணடுள்ள பொது மக்கள், தற்போது சரியான தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

எனினும், மக்களின் ஆணையை புரிந்து கொள்ளாத ஜாதிக ஹெல உறுமய மீண்டும் பிழையான பாதையில் செல்கின்றது.

ஜாதிக ஹெல உறுமயவின், வெற்றிலைச் சின்னத்தின் வாக்குகளை சிதறடிக்கச் செய்யும் முயற்சி வெற்றியளிக்காது.

ஜனவரி மாதம் 9ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அமைக்க ஒத்துழைப்பு வழங்க ஜாதிக ஹெல உறுமயவிற்கு முடிநதது.

எனினும், இம்முறை அவ்வாறு அரசாங்கத்தை அமைக்க ஒத்துழைப்பு வழங்க ஜாதிக ஹெல உறுமயவிற்கு முடியாது என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை விட்டு விலகி தனித்து போட்டியிட ஜாதிக ஹெல உறுமய எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் சிங்கள பத்திரிகையொன்றுக்கு உதய கம்மன்பில இந்த கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

# மகிந்தவைத் தோற்கடிக்கவே சந்திரிக்காவுடன் இணைந்தது ஐ.தே.க.

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

மகிந்தவைத் தோற்கடிப்பதற்காகவே சந்திரிக்காவுடன் ஐ.தே.க இணைந்து கொண்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சந்திரிக்கா குமாரதுங்கவின் 70 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு விடுதலைப புலிகளுடன் நடாத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்திருந்தால், போரின் மூலம் இழக்கப்பட்ட பல உயிர்களை காப்பாற்றியிருக்க முடியும்

போர் நிறுத்த உடன்பாட்டின் கீழ் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தப்பட்ட போது சந்திரிக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதனை புரிந்து கொள்ளவில்லை.

2003ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் முரண்பாடுகளுக்கு மத்தியில் தேசியப்பிரச்சினை தொடர்பில் செயற்படமுடியும் என்று தாம் நினைத்த போதும் அது தோல்வியடைந்ததாக ரணில் குறிப்பிட்டார்.

• அதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சில உறுப்பினர்கள் அந்த முயற்சியை குறுகிய பார்வையுடன் நோக்கினர்.

இதன்காரணமாக 2003ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கம் கலைக்கப்பட்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதனால் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்தையும் இரத்துச் செய்யப்பட்டது.

இதேவேளை கடந்த காலத்தில் பல முரண்பாடுகள் இருந்த போதும் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை தோற்கடிப்பதற்காக சந்திரிக்காவுடன் இணைநது செயற்பட ஐக்கிய தேசியக்கட்சி இணங்கியது.

இதனடிப்படையில் பல்வேறு அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு மைத்திரிபால சிறிசேன பொதுவேட்பாளராக பரிந்துரைக்கப்பட்டார் என்றும் ரணில் சுட்டிக்காட்டினர்.

# சு.கட்சியின் அடுத்த திட்டம் மகிந்த - மைத்திரி ஒரே மேடையில்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் ஒரே மேடைக்கு அழைப்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த திட்டமாகும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

அடுத்த கட்டமாக மகிந்தவையும் மைத்திரியையும் ஒரே மேடையில் ஏறச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். பிளவடைந்து செல்லவிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கையினால் ஒன்றுபட்டது.

நாட்டு மக்களுக்கு கட்சி தொடர்பில் கடுமையான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் இரண்டு தலைவர்களையும் ஒரே மேடையில் ஏறச் செய்வது அடுத்த இலக்காக அமைந்துள்ளது என ஜோன் செனவிரட்ன சிங்கள நாளிதழ் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

# மிகப்பாரிய காட்டிக்கொடுப்பு செல்லாக் காசாக மைத்திரி

## தொடரும் ஜே.வி.பி.யின் போர்க்கணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊடாக வேட்பு மனு வழங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செல்லாக் காசாக மாறியுள்ளார் என ஜே.வி.பி.யின் மத்திய செயற்குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

மகிந்தவிற்கு வேட்பு மனு வழங்கி நாட்டின் அரசியலில் மைத்திரிபால சிறிசேன பெறுமதியற்றவராக மாறியுள்ளார்.

உலக அரசியல் வரலாற்றில் இடம்பெற்ற மிகப் பெரிய காட்டிக் கொடுப்பு இதுவாகும்.

நாம் அனைவரும் இணைந்து கடந்த ஜனவரி மாதம் ஆரம்பித்த போராட்டம் கைவிடப்படமாட்டாது.

தொடர்ச்சியாக இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் அரசியல் பூமியிலிருந்து வெளியேற்ற நாம் நடவடிக்கை எடுப்போம் என லால்காந்த கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

# பொதுமக்களின் நிதியை கொள்ளையடிக்காத சந்திரிக்கா

## கூறுகிறார் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க பதவியில் இருந்த காலத்தில் அவர் பொது மக்களின் நிதியை கொள்ளையடிக்கவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சந்திரிக்கா குமாரதுங்கவின் 70 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வின போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பங்கேற்றார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் வேட்பு மனு வழங்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற முதலாவது பொது நிகழ்வு இதுவாகும்.


மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பு மனு வழங்கப்பட்டமைக்கு எதிராக சந்திரிக்கா கடும் விமர்சனத்தை வெளியிட்டார் என்ற செய்திக்கு மத்தியிலேயே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மேலும் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சந்திரிக்கா பதவியில் இருந்தபோது கட்சிக்குள் உள்ளக ஜனநாயகம் இருந்தது.

ஊழல்கள் இடம்பெறவில்லை. பொதுமக்களின் நிதிகளை அவர் கொள்ளையடிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

# கிளிநொச்சியின் தலை நிமிர்விற்கு முழு முதற்காரணம் சந்திரகுமார்

## ப.நோ.கூ.ச. தலைவர் தெரிவிப்பு



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மட்டுமே கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்கும் மக்களின் மேம்பாட்டுக்கும் அரும் பாடுபட்டிருக்கின்றார் என்பதை மனசாட்சியுள்ள அனைவரும் நன்கு அறிவர் எனவே மக்கள் தொடர்ந்தும் அவரின் சேவையைப் பெறுவதற்காக அரசியலில்அவரைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் தியாக ராஜா தெரிவித்துள்ளார். அண்மையில் பச்சிலைப்பள்ளி சோரன் பற்றில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அரசியல் எதிரிகளாலும் மறுக்க முடியாத சேவையை மக்களுக்கு ஆற்றியிருக்கின்றார் தற்போது கிளிநொச்சி மாவட்டம் தலைநிமிர்ந்து நிற்பதற்கு முதற்காரணமாக திகழ்நதவர் அவரே என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. மீள்குடியேற்றத்தின் ஆரம்பத்தில் ஒவ்வொரு துறை சார்ந்தவர்களும் தமது அடுத்த கட்ட நகர்வு எவ்வாறு அமையப் போகினறது என்று வழிதெரியாது ஸ்தம்பித்து நின்ற காலப்பகுதியில் மக்களைத் தேடிவந்து தேவைகளை இனம் கண்டு நிறைவேற்றியவர்.

அவர் இப்பிரதேசத்தில் கிராமம் கிராமமாகச்சென்று மக்களின் ஒவ்வொரு தேவைகளையும் கண்டறிந்து நிறைவேற்றியிருக்கின்றார். அவரின் காற்தடம் பட்ட பிரதேசங்கள் எல்லாம் இன்று அபிவிருத்தியின் உச்சத்தை எட்டியிருக்கின்றன. குறிப்பாக அவரின் உழைப்பின் பயனைப் பெறாத மக்களே இல்லை என்ற அளவுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் அவரது சேவைகளின் பிரதிபலிப்புக்களை காணமுடிகின்றது. அவர் கடந்த ஆட்சி காலத்தில் மட்டுமன்றி இவ்வருட ஆரம்பத்தில் உருவான புதிய அரசாங்கத்தினையும் சரியாகப் பயன்படுத்தி மக்களின் பல பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுத்திருக்கின்றார்

எனவே அவர் எந்தக் காலத்திலும் எந்த சக்திகளுக்கும் முகம்கொடுத்து மக்களுக்காக சேவையாற்றக்கூடிய ஆளுமையைக் கொண்டவர். தொடர்ந்தும் தேவைகளுடனும் எதிர்காலம் பற்றிய கனவுகளுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு இவ்வாறான செயல் வீரம் கொண்டவர்களின் தலைமைத்துவமே அவசியமா கின்றது. மாறாக தேர்தல் காலத்தில் மட்டும் மக்களைத் தேடி வரும் அரசியல்வாதிகளை மக்கள் தமது பிரதிநிதிகளாக்கி விட்டு எவ்வித பயனுமின்றி அடுத்த தேர்தல் காலம் வரை காத்திருக்கின்ற நிலைமை இனியும் எம் மக்களுக்கு வேண்டாம் அதற்கு கிளிநொச்சி மாவட்ட மக்களும் தயார் இல்லை என அவர் மேலும் தெரி வித்தார்.

அண்மையில் பச்சிலைப்பள்ளி சோரன் பற்றில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், பச்சிலைப் பள்ளி பிரதேசசபை உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன் மற்றும் இராசதுரை ஆகியோரும் மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மக்களும் கலந்துகொண்டனர்.

# பேருந்து நிலையத்தை திறக்கக் கோரிக்கை



வவுனியாவில் புதிதாக கட்டப்பட்டு இன்னமும் திறக்கப்படாத நிலையில் உள்ள மத்திய பேருந்து நிலையத்தை திறந்து வைக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

வவுனியாவில் முதலாம் குறுக்குத்தெரு இரண்டாம் குறுக்குத் தெரு ஆகிய வீதிகளில் தனியார் பேருந்துகள் தரித்து நிற்பதனால் போக்குவரத்து நெருக்கடி மற்றும் வீதி விபத்துக்கள் ஏற்பட்டு வருவதை தவிர்க்கும் பொருட்டு அரசினால் யாழ்.வீதியில் மத்தியபேருந்து நிலையத்தை கட்டும் பணி கடந்த ஆண்டு ஆரம்பிக்பட்டு நடப்பு ஆண்டின் முற்பகுதியில் கட்டி முடிக்கப்பட்டு 6 மாதம் கடந்த நிலையிலும் இன்னமும திறக்கப்படாதுள்ளமை பயணிகள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

விரைவில் இவ் பேருந்து நிலையத்தை திறந்து வைக்கவேண்டும் என்ற கோரிக்கை பயணிகளால் முன்வைக்கபட்டுள்ளது

# பாடசாலை அதிபருக்கு "அதிபர் திலகம்" விருது

30 ஆண்டுகள் கல்விப் பணியாற்றி அதில் 23 ஆண்டுகள் அதிபராக சேவையாற்றிய மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் எஸ்சிவநேஸவரனுக்கு அதிபர் திலகம் என்னும் உயர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் அதிபராக இருந்து ஓய்வு பெறும் எஸ்.சிவநேஸ்வரனின் மணிவிழா நிகழ்வுகள் விக்ரோரியாக்கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நேற்று முன்தினம மானிப்பாய் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில இடம் பெற்ற போது இவ் உயரிய பட்டம அவரது சேவைக்காக இணுவில் பொது. அமைப்புக்களின் சார்பில் யாழ்.பல்கலைக் கழக வணிகத் துறைத் தலைவர பேராசிரியர் க.தேவராஜா வினால் வழங்கிக் கௌரவிக் கப்பட்டது.

சிவநேஸ்வரன் 1984 ஆம் ஆண்டு இலங்கை ஆசிரியர் சேவையில் புத்தளம் அல் அக்ஷா மகாவித்தியாலத்தில் ஆசிரியராக முதற்கடமையேற்று புத்தளம் தேத்தாப்பளை தமிழ் மகாவித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி என்பவற்றில் ஆசிரியராகப் பணியாற்றி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி என்பவற்றின் அதிபராக விளங்கி கல்லூரியினை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் சென்றவர.

குறைந்த வளப்பற்றாக் குறையுடன் குறைந்த மாணவர் எண்ணிக்கையுடன் காணப்பட்ட சண்டிலிப்பாய் ராஜா ஸ்கூல் என்று பலராலும அறியப்பட்ட பின்தங்கிய நிலையில் காணப்பட்ட பாடசாலையினை அதிபராக பொறுப்பேற்று பாடசாலை வளங்களினை அதிகரித்து மாணவர் எண்ணிக்கையினையும் தேசியம் வரை வெற்றிகள் பெற வைத்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி என்ற பெயர் மாற்றத்துடன் கல்லூரியினை தரமுயர்த்திய பெருமைக்குரியவர்.

இவ்வாறே மானிப்பாய் இந்துக கல்லூரியினையும் கவின்கலையுடன் இணைந்த வகையில் பாடசாலை பௌதீக வளத்தினை அபிவிருத்தி செய்து பாடசாலையை புதுப்பொலிவு பெறச் செய்ததுடன் கல்வி இணைப் பாடவிதானச் செயறபாடுகளில் தேசியம் வரை மாணவர்களினை வெற்றி பெறச் செய்த இக் கல்லூரியினை வலிகாமம் கல்வி வலயத்தின் முதலாவது தேசியப் பாடசாலையாக தரமுயர்த்தியவர். இவரது அதிபர் சேவையினைப் பாராட்டி இவ் உயரிய விருது வழங்கிக் கௌரவிக்.கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(63)

# ஓமந்தை கண்ணகை அம்மனின் வருடாந்த மஹோற்சவம்

வவுனியா ஓமந்தை அரசர் பதி ஸ்ரீ கண்ணகை அம்மன் பொற கோவிலின் வருடாந்த மஹோற்சவம் நேற்றுக் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும 13 ஆம் திகதி வரையும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து 9 நாட்கள் இடம் பெறவுள்ள இத் திருவிழாவில் கோவலனார் அவதாரம், கடலோட்ட கதை,வீரநாராயணன் வருகை விளங்குதேவன் போர்,கல்யாண படிப்பு அரங்கேற்ற காதை, கோவலனார் பொன்னுக்கு மறித்த கதை, கண்ணகை அம்மன் சிலம்பு கூறல மற்றும் பொங்கல் நிகழ்வுகள், வைரவர் மடை என்பன இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமை 1008 பானைகளில் பொங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# கண்டாவளை பிரதேச செயலகத்தை உரிய இடத்தில் அமைக்க நடவழக்கை

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தை உரிய இடத்தில் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகம் நிரந்தர கட்டடம் இன்றியே இயங்கி வருகின்றன. தற்போது திட்டமிடல் பகுதி புளியம்பொக்கணையிலும் ஏனைய அலகுகள் வெலிக்கண்டல் பகுதியிலும் இயங்கி வருகின்றது. வெவ்வேறு இடங்களில் அலகுகள் இயங்குவதால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

2010ஆம் ஆண்டு கண்டாவளை பிரதேச செயலகத்துக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான நிதி கிடைக்கப்பெற்றும் அமைவிடத்தில் ஏற்பட்ட இழுபறி நிலை காரணமாக நிதி திரும்பிச் சென்றது. தற்போது மீண்டும் நிதி கிடைக்கப்பெற்று அமைவிடத்துக்கான பிரச்சினை தீர்க்கப் பட்டு உரிய இடத்தில் கட்டிடம் அமைப்பதற்கான கேள்வி அறிவித்தல் கோரப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## முரசின் இன்றைய பலன்

07.07.2015 செவ்வாய்க்கிழமை

மன்மத வருஷம் ஆனி மாதம் 22 ஆம் திகதி.

மரண யோகம் / சஷ்டி திதி

பூரட்டாதி நட்சத்திரம் முன் இரவு - 9.21 வரை பின் உத்தரட்டாதி

இராகுகாலம் 2.58 - 4.28 வரை சுப நேரம் 10.28 - 11.58 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: முரண்பட வந்தவருக்கு நியாயத்தை எடுத்துக் கூறியதனால் பிரளயம் மறைதல்

**ரிஷபம்**: பிழையான ஜாதகக்கணிப்பினால் திருமணம் நிறைவேற்ற முயன்றவேளை இறை செயலால் தப்பிவிடல்

**மிதுனம்**: தொழில் தடை தாமதங்கள் இருப்பினும் இலாபம் ஏற்பட்ட வண் ணம் இருத்தல்

**கடகம்**: குழந்தைப்பேற்றுக்காக வைத்தியர்களைச் சந்தித்து ஆலோசனை பெற முயற்சித்தல்

**சிம்மம்**: முகப்புத்தக மூலம் கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படல்

**மீனம்**: திறமை மற்றும் தகுதியிருந்தும் சிபார்சு இன்மையால் பதவி கிட்டாது விடல்

**கன்னி**: பங்குத் தொழிலை கௌரவக் குறைபாட்டினால் கை விட்டு விடல்

**கும்பம்**: போக்குவரத்து விதியை மீறிச் செயற்பட்டவேளை தண்டம் விதித்தல்

**மகரம்**: எதிர்பாராது ஏற்பட்ட சுபகாரியத்தைக் கொண்டாட பணத்திற்கு திண்டாட்ட மேற்படல்

**தனுசு**: நோய் குணமடைய தெய்வத்தையும்,மருந்தில்லா மருத்துவ முறையையும் நாட விரும்புதல்

**விருச்சிகம்**: தற்காலிகப் பணி நிரந்தரமாக்கப்பட்டதனால் ஆனந்தமடைதல்

**துலாம்**: கைத்தொலைபேசி மூலம் உரையாழச் செல்கையில்ஏற்பட விருந்த விபத்து நூலிழையில் தப்பிவிடல்

# பெண்கள் உலககிண்ண கால்பந்து அமெரிக்காவிடம் வீழ்ந்தது ஜப்பான்



(வானகோவர்)

பெண்கள் உலகக்கோப்பை கால்பந்துப் போட்டியில் ஜப்பானை வீழ்த்தி அமெரிக்கா சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

பெண்கள் உலகக்கோப்பை கால்பந்துப் போட்டி கனடாவில் நடைபெற்று வந்தது. இதற்கான இறுதிப்போட்டி நேற்று அதி காலை நடைபெற்றது. இதில் அமெரிக்கா- ஜப்பான் அணி கள் பலப்பரீட்சை நடாத்தின.


ஆட்டம் தொடங்கியது முதலே அமெரிக்க வீராங்கனைகள் ஆதிக்கம் செலுத்தினார்கள். அவர்களுக்கு ஜப்பான் வீராங்கனைகளால் ஈடுகொடுக்க முடியவில்லை.

அமெரிக்க வீராங்கனை லாய்ட் ஆட்டம் தொடங்கிய 3ஆவது நிமிடத்தில் முதல் கோலை அடித்தார். அடுத்த 2ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோல் அடித்தார்.

அதன்பின் 14ஆவது நிமிடத்தில் ஹோலிடே ஒரு கோல் அடிக்க 16ஆவது நிமிடத்தில் லாய்ட் மேலும் ஒரு கோல் அடித்தார். இதற்கு பதில் கோலாக 27ஆவது நிமிடத்தில் ஜப்பான் வீராங்கனை ஓஹிமி ஒரு கோல் அடித்தார். இதனால் முதல் பாதி நேரத்தில் அமெரிக்கா 4:1 என முன்னிலை பெற்றது.

பின்னர் இரண்டாவது பாதி நேரத்தில் 52ஆவது நிமிடத்தில் அமெரிக்க வீராங்கனை ஜோன்ஸ் டன் ஜப்பானுக்கு சேம்சைட் கோல் போட்டார். 54ஆவது நிமிடத்தில் அமெரிக்க வீராங்கனை ஹீத் ஒரு கோலும் அடித்தனர். அதன்பின் இருஅணி வீராங்கனைகளும் கோல் ஏதும் அடிக்காததால் அமெரிக்கா 5:2 என்ற கணக்கில் ஜப்பானை வீழ்த்தி 3ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றது

# ஹோலியின் ஆக்ரோஷம் வரவேற்கும் விவியன்



ஷிராட் ஹோலியின் ஆர்வமும், ஆக்ரோஷமும் ஆட்டத்துக்கு தேவையானது என மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் அதிரடி துடுப்பாட்ட வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் தெரிவித்துள்ளார். செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த் பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

ஆடுகளத்தில் ஆக்ரோஷத்துடன் செயற்படுகிறார். இது தரமானது. அவரது இந்த அணுகுமுறை மற்றும் செயற்பாட்டில் தவறு எதுவுமில்லை. டோனியிடம் இருந்து அவர் முற்றிலும் மாறுபட்டவர். அவரிடம் துடிப்பும், வேகமும் அதிகமாகக் காணப்படுகிறது. எதிர்கால இந்திய அணியின் பிரகாசம் அவரது கையில் இருக்கிறது.

இன்னும் இளம் வ்ரரான அவருக்கு 26 வயது தான் ஆகிறது. அவரது துடுப்பாட்ட நுணுக்கம் சிறப்பாக இருக்கிறது.

இந்திய கிரிக்கெட் சபை என்னை அணுகினால் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு மகிழ்ச்சியுடன் உதவத் தயார்.

திறமையான வீரர்களுக்கு எனது உதவியை அளிக்கத் தயாராக இருக்கிறேன். எனத் தெரிவித்துள்ளார்.

# சிறப்பு பூஜைகளில் ரஹானே



இந்திய அணியின் துடுப்பாட்ட வீரரான அஜின்கியா ரஹானே நேற்று முன் தினம் மும்பையில் உள்ள புகழ் பெற்ற சித்தி விநாயகர் கோவி லில் சிறப்பு வழிபாடில் ஈடுபட்டார.

இதனைத் தொடர்ந்து, ரஹானேவுக்கு கோவில் நிர்வாகிகள் வரவேற்பளித்தனர். பின்னர் விநாயகப் பெருமானின் சிறப்பு பூஜைகளில் பங்கேற் றதன் பின்னர் ரஹானே வீடு திரும்பினார்.

சிம்பாப்வே அணிக்கெதிரான தொடரில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய கிரிக்கெட் அணியின் புதிய அணித்தலைவராக ரஹானே நியமிக்கப்பட்டுள்ள நிலையில் இச் சிறப்பு வழிபாட்டில் அவர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# முதலாவது ரூவென்ரி 20 தென்னாபிரிக்கா வெற்றி



தென்னாபிரிக்கா மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது ரி20 போட்டியில், தென்னாபிரிக்கா அணி 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி பங்களாதேஷிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு ரி-20 போட்டி, மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இதன் படி முதல் ரி20 போட்டி நேற்று முன்தினம் டாக்காவில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென் ஆபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன் படி தென்னாபிரிக்க அணி, 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 148 ஓட்டங்களை குவித்தது. அணியில் அதிகபட்ச ஓட்டங்களாக, டுபிளிஸஸ் 79 ஓட்டங்களையும், ரொஸகொவ் 31 ஓட்டங்க ளையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சில், சனி 2 விக்கெட்டுகளையும், ஹிசைன், சகிப் அல் ஹசன் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

149 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 96 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்ளையும் இழந்தது. அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக சகிப் அல் ஹசன் 26 ஓட்டங்களையும், லிட்டன் தாஸ் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் ரபாடா, வெய்ஸ், டுமினி தலா 2 விக்கெட்டுக்ளையும், பென்ஜிஷே, பர்னல் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க அணியின் டுபிளிஸஸ் தேர்வு செய்யப்பட்டார்

# ஜேர்மன் பிரான்ஸ் மீது பிபா தலைவர் பிளாட்டர் புதிய குற்றச்சாட்டு



சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் செப் பிளாட்டர் பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் நாடுகள் மீது புதிய குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.

குறித்த குற்றச்சாட்டில், 2018 ஆம் ஆண்டு மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் பிபா உலகக் கிண்ணத்தை நடாத்துவதற்கு ரஷ்யாவுக்கும் கத்தாருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்று பிரான்ஸும் ஜேர்மனியும் அரசியல் அழுத்தங்களைக் கொடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலுக்கு ஆதரவு வழங்குமாறு ஜேர்மன் மற்றும் பிரான்ஸின் ஜனாதிபதிகள் உட்பட அந்நாட்டு அரசியல் தலைவர்கள், தமது நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

குறித்த இரண்டு ஆண்டுகளிலும் எந்த நாட்டிற்கு உலகக் கிண்ணத்தை நடாத்த வாய்ப்பு வழங்குவது என்பதைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நடப்பதற்கு முன்பே இந்த அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள செப் பிளாட்டர், தான் செய்யாத தவறுகளுக்காக தனக்கு குற்றங்களை சுமக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மெஸ்சியின் குடும்பம் மீது தாக்குதல்

44ஆவது கோபா அமெரிக்க கால்பந்து போட்டியின் இறுதிப் போட்டி, நேற்று முன்தினம் சாண்டியாகோவில் நடைபெற்றது. இப் போட்டியினை பார்வையிட வந்த ஆர்ஜன்டீனாவின் நட்சத்திர வீரர் மெஸசியின் குடும்பத்தினரை, சிலி நாட்டு இரசிகர்கள் தாக்கியுள்ளனர்.


தென் அமெரிக்க கண்டத்தின் கால்பந்து ஜாம்பவான் யார் என்பதை நிர்ணயிக்கும் 44ஆவது கோபா அமெரிக்க போட்டியில், சிலி அணி ஆர்ஜன்டீனா அணியை 4-1 என்ற கணக்கில் வீழ்த்தி முதல் முறையாக சம்பியன் பட்டத்தை வென்றது. இறுதி ஆட்டம் நடந்து கொண்டிருந்த போது முதல் பாதிக்கு சற்று முன்பாக சிலி நாட்டு இரசிகர்கள் மெஸ்சியின் குடும்பத்தினரை வம்புக்கு இழுத்தனர்.

கடும் வாக்குவாதம் செய்த ஒரு இரசிகர் மெஸ்சியின் சகோதரர் ரோட்ரிகோவை திடீரென அடித்து விட்டார்.

பின்னர் அவர்களை பொலிஸார் பாதுகாப்பான இடத்தில் அமர வைத்தனர். இதே போல் ஆர்ஜன்ரீனாவின் செர்ஜியோ அகுரோவின் குடும்பத்தினரையும், இரசிகர்கள் கண்டபடி திட்டீ தொந்தரவு செய்துள்ளனர்.

# யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டம்

# ஏஞ்சல், வேம்படி அணிகள் சம்பியன்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடாத்திய கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல், வேம்படி மகளிர் கல்லூரிகள் வெற்றி பெற்று சம்பியன்களாகின.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 11 வயது ஆண்கள்' பிரிவில் மானிப்பாய் ஏஞ்சல் சென்ஜோண்ஸ் கல்லூரி அணிகள் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் இரு அணி வீரர்களும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்லர் என புள்ளிகளைப் பெற்ற வண்ணமிருந்தனர்.

இதனால் போட்டி மேலும் பரபரப்பாக அமைந்தது. இறுதியில் ஏஞ்சல் 20:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனானது.

அதேபோன்று 17 வயதுப் பெண்கள் அணியினருக்கான போட்டியில் கொக்குவில் இந்துவை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரி மோதியது. ஆரம்பம் முதல் இரு அணி வீராங்கனைகளும் மாறி,மாறி புள்ளிகளைப் பெற்றவண்ணமிருந்தனர்.

இறுதி நேரத்தில் வேம்படி 46:42 என்ற புள்ளிகளைப் பெற்று சம்பியனாகியது.

13 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் வீராங்கனைகளின் பந்துப் பரிமாற்றத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனைகள் திணறினர்.இறுதியில் ஏஞ்சல் 28:5 என புள்ளிகள் பெற்று சம்பியனாகியது.

இதேவேளை 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் - யாழ்.இந்து மோதின எனினும் போட்டியில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக தமக்கு பாதுகாப்பு இல்லையென போட்டியிலிருந்து யாழ்.இந்து வீரர்கள் வெளியேறவே ஏஞ்சல் சம்பியனாக அறிவிக்கப்பட்டது. (93)




# வலிகாமம் வலய வலைப்பந்து சம்பியனானது அராலி சரஸ்வதி



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் வலிகாமம் வலய சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனவை எதிர்த்து அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் மோதியது.

ஆரம்பம் முதலே சிறப்பாக விளையாடிய அராலி சரஸ்வதி வீரர்கள் புள்ளிகளைப் பெற்ற வண்ணமிருந்தனர். இதனால் பந்து அவர்களின் பக்கமே இருந்தது. அராலி வீரர்களின் பந்து பரிமாற்றத்திற்கு ஈடு கொடுக்க மகாஜன வீரர்கள் திணறினர். இறுதியில் 8:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வலிகாமம் வலயம் வலயச் சம்பியனானது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பொன்னாலை வரதராஜப் பெருமானுடன் மோதியது. இதில் சிறப்பாக விளையாடிய யூனியன் கல்லூரி 10:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று மூன்றாமிடத்தைப் பெற்றது. (93)

# புத்தூர் கலைமதி கால்பந்து முதல் சுற்றில் வென்ற அணிகள்



(புத்தூர்)

புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் ஈவினை கலைமகள், குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணிகள் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட லீக்கின் அனுசரணையுடன் கால்பந்தாட்டப போட்டி யொன்றை நடாத்தி வருகிறது. இதில் நேற்று முன்தினம் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் முதல் சுற்று ஆட்டங்கள் இடம்பெற்றன.

இந்தப் போட்டியின் முதல் ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வராவை எதிர்த்து ஈவினை கலைமகள் மோதிய போட்டியில் 1:0என்ற கோல் கணக்கில் கலைமகள் வெற்றி பெற்றது அடுத்து இடம்பெற்ற போட்டியில் அச்செழு வளர்மதியை எதிர்த்தாடிய குப்பிளான் குறிஞ்சிக்குமரன் 0:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (93)

# மன்னார் மாணவர்களுக்கு கூடைப்பந்தாட்ட பயிற்சி



(மன்னார்)

யாழ். கிறிஸ்தவ வாலி பர் சங்கத்தின் 125 ஆவது வருட பூர்த்தியினை முன்னிட்டு முதற்கட்ட நிகழ்வாக வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் இருந்து பாடசாலை மாணவ மாணவிகளுக்கான கூடைப்பந்தாட்ட பயிற்சிப்பாசறை நிகழ்வு முல்லைத்தீவு வவுனியாவில் நிறைவு செய்து மன்னாரில் கடந்த முதலாம் திகதி தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இருந்து 70 மாணவமாணவிகள் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிப்பட்டறை காலை 9 மணி முதல் மாலை 4-30மணி வரை நடைபெற்றதுடன் பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் அதிதிகளாக யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ - தலைவர் -சு.வினோத் செயலாளர்-எஸ்.ஜெயராஜசிங்க, மன்னார் வை.எம்.சி.ஏ.தலைவர் -ஜே.ஜி. எல்.பிகிறாடோ ஆகியோருடன்

செயலாளர் -ஜி.ஏ.பாஸ்கரன் இணைப்பாளர் -ஏ.எஸ்.ரொபின்சன். மன்னார் மாவட்ட பொலிஸ் அதிகாரி-சுஜீவ ஆகியோருடன் பயிற்சி வழங்கிய ஆசிரியர்களாக ஜி.செபஸ்ரியாம்பிள்ளை கே.நிஷாந்தன் வி.கௌரி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# துடுப்பாட்ட போட்டி

இலங்கை துடுப்பாட்டச் சங்கம் பாடசாலை அணிகளுக்கிடையே நடாத்தி வரும் துடுப்பாட்டப் போட்டியில் யாழ்.கிளிநொச்சி மாவட்ட அணிகள் மோதும் போட்டியொன்று இன்றைய தினம் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இதன்படி 15 வயதுப் பிரிவு 3 அணிகளுக்கிடையிலான போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி- கிளிநொச்சி இந்துக் கல்லூரியை எதிர்த்து மோதவுள்ளது. இவ் ஆட்டம் கிளி-இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை நடைபெறவுள்ளது. (93)

# வடமாகாண தடகளப் போட்டி 2,500 வீரர்கள் பங்கேற்பு

(வவுனியா)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் வவுனியா கல்வியியற் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நாளைமறுதினம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களிலிருந்து 351 பாடசாலைகளைச்சேர்ந்த சுமார் 2,500 வீரவீராங்கனைகள் இம்முறை போட்டியிடவுள்ளனர்.

யாழ்மாவட்டத்தில் யாழ்வலயம் 37 வலிகாமம் 39 வடமராட்சி (28) தென்மராட்சி 20 தீவுகள் 24 மன்னார் மாவட்டத்தில் மன்னார் 34, மடு 20, வவுனியா மாவட்டத்தில் வவு னியா தெற்கு 36 வவுனியா வடக்கு 21 முல்லைத்தீவு மாவட்டங்களில் முல்லைத்தீவு 29, துணுக்காய் 24, கிளிநொச்சி மாவட்டங்களில் கிளிநொச்சி 39 ஆகிய வலயங்களைச் சேர்ந்த வீராங்கனைகளே போட்டியிடுகின்றனர்.

13, 15, 17, 19 ஆகிய வயதுக் குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் 134 தங்கப்பதக்கங்களுக்கான இறுதி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் 13 வயதுக்குட்பட்டவர்கள் தவிர்ந்த மற்றைய வயதுக் குட்பட்ட தனிப்பட்டவர் கள் நிகழ்ச்சிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர் களும் தொடர் ஓட்டப் போட்டிகளில் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணியினரும் அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழாவில் பங்குபற்று தகுதித் பெறுவர்.

கடந்த வருடம் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழாவில் பெரு முன்னேற்றம் காட்டிய வடக்கு மாகாணம் இவ்வருடம் அதனை விட சிறந்த பெறுபேறுகளைப் பதிவு செய்யக்கூடிய வீர வீராங்கனைகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வழமைபோல கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதய, தெல்லிப்பளை மகாஜன ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் வடமாகாணத்திற்கு பல பதக்கங்களைப் பெற்றுக் கொடுப்பார்கள், என நம்பப்படுகிறது.

இந்தப் பாடசாலைகளைவிட வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த பல வீராங்கனைகள் இவ்வருடம் மாகாண மட்டத்தில் பல புதிய சாதனைகளை நிலைநாட்டி தேசிய மட்டத்திலும் சாதிப்பது உறுதி.

13 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டிகள் ஆசிய விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திட்டத்திற்குள் நடத்தப்படுவதுடன் அதில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெறுபவர்கள் திட்டத்திற்குள் ஈர்க்கப்படுவர்.

இதேவேளை இம்முறை விசேட தேவையுடைய மாணவர்களுக்கான நிகழ்ச்சிகளையும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

இவர்களுக்கு மொத்தமாக 20 நிகழ்ச்சிகள் தின்ந்தோறும் 5 நிகழ்ச்சிகள் வீதம் நடத்தப்படவுள்ளன.

வடக்குமாகாண பாடசாலைகள் தடகளப்போட்டிகளில் முதலாம் நாளான நாளைமறுதினம் காலை 9 மணிக்கு ஆரம்ப விழா வைபவம் வடக்கு மாகாண கல்வி சபை பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும இளைஞர் விளையாட்டு அமைச்சு செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக வடக்கு மாகாணசபை அவைத் தலைவர் கந்தையா சிவஞானம் கலந்துகொள்வார்.

நிறைவு நாள் விழா மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா பிரதம அதிதியாக கலந்து கொண்டு பிரதான பரிசில்கள் வழங்குவார்.

# கரப்பந்தாட்டம்

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 13 வயதுப் பிரிவினருக்கான ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டம் இன்று காலை 8.30 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் பாடசாலை அணிகளை உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (93)

# அமெரிக்க – கியூப உறவு இயல்பு நிலையை அடைந்தால்...

- செம்படையான் -



அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையிலான உறவுகள் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருகின்றன. இதன் ஒரு வெளிப்பாடாக ஏப்ரல் 11ஆம் திகதி பனாமா சிற்றியில் நடைபெற்ற அமெரிக்கக் கண்ட நாடுகளின் உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும், கியூப ஜனாதிபதி ராவுல் கஸ்ட்ரோவும் கைகுலுக்கிக் கொண்டனர். கியூபா சம்பந்தமான அமெரிக்காவின் 55 வருட எதிர்க் கொள்கைகள் தோல்வி அடைந்து விட்டதாக ஒபாமா பகிரங்கமாக அறிவித்த பின்னரே இந்த புதிய உறவு முயற்சிகள் ஆரம்பமாயின.

1959இல் ஃபிடல் கஸ்ட்ரோ தலைமையில் ஆயுதப் புரட்சி ஏற்பட்டு கியூபாவில் ஒரு சோசலிச அரசாங்கம் அமையும் வரை, அங்கு சர்வாதிகார ஆட்சி நடாத்தி வந்த பட்டிஸ்டாவையே அமெரிக்க அரசுகள் ஆதரித்து வந்தன. அவரது ஆட்சியின் கீழ் கியூபாவின் அனைத்து வளங்களையும் அமெரிக்க பகாசுரக் கொம்பனிகள் உட்பட மேற்குலக பல்தேசியக் கொம்பனிகள் தங்குதடையின்றிச் சுரண்டிச் சூறையாடி வந்தன. ஃபிடல் அதிகாரத்துக்கு வந்ததும் அந்தக் கொம்பனிகளையெல்லாம் நஷ்ட ஈடு எதுவும் இன்றித் தேசவுடைமையாக்கினார்.

அதன் பின்னர் அமெரிக்கா கியூபாவுக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்திப் பொருளாதாரத் தடை விதித்தது. அமெரிக்காவின் இந்தக் கொள்கை கியூபாவை சோவியத் யூனியனையும் இதர சோசலிச நாடுகளையும் நோக்கித் தள்ளி விடுவதில்தான் முடிந்தது. அத்துடன் ஃபிடல் கஸ்ட்ரோவைக் கொலை செய்வதற்கும் ஏராளமான தடவைகள் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் அவை எதுவும் வெற்றிபெறவில்லை.

1990இல் சோவியத் யூனியனிலும் இதர கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோசலிச அரசுகள் வீழ்ச்சி கண்ட பின்னர், கியூபாவிலும் ஃபிடலின் சோசலிச அரசு ஆட்டம் கண்டுவிடும் என மேற்கத்தைய முதலாளித்துவ சக்திகள் எதிர்பார்த்தன. அப்படி எதுவும் நடக்கவில்லை. மாறாக கியூபா தனது சொந்தக்காலில் நிற்க முயற்சிகள் எடுத்ததுடன், பல லத்தீன் அமெரிக்க நாடுகளின் ஆதரவையும் பெற்றுக் கொண்டது. அதுமாத்திரமில்லாமல், கியூபாவின் வழியைப் பின்பற்றி பல லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க எதிர்ப்பு அரசாங்கங்கள் உருவாக ஆரம்பித்தன.

அதன்மூலம் கியூபாவைத் தனிமைப்படுத்த முயற்சித்த அமெரிக்காவின் கொள்கை தோல்வி கண்டு, அமெரிக்காதான் தென்னமெரிக்கக் கண்ட நாடுகளிடையே தனிமைப்படும் நிலையும் உருவாகத் தொடங்கியது. இந்தச் சூழ்நிலையிலேயே தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கியூபா பற்றிய அமெரிக்கக் கொள்கையை மாற்றியமைக்கத் தீர்மானித்தார்.

கியூபாவுடனான உறவு சுமுக நிலைக்கு வருவதை அமெரிக்கா அரசு மட்டுமின்றி, பெரும்பாலான அமெரிக்கப் பல்தேசியக் கொம்பனிகளும் ஆர்வத்துடன் விரும்புகின்றன. முன்பு கியூபாவைத் தங்குதடையின்றிச் சுரண்டிய அவை மீண்டும் அந்நாட்டுடன் சுமுக உறவு ஏற்பட்டால் தமது கைவரிசையைத் திரும்பவும் ஆரம்பிக்கலாம் என எண்ணுகின்றன. அப்படி ஒரு சகஜ நிலை ஏற்பட்டால் அமெரிக்கக் கொம்பனிகளின் எதிர்பார்ப்புகளில் சில இவைதான்:

❑ வருடாந்தம் 2 மில்லியன் அமெரிக்கர்கள் கியூபாவுக்கு விஜயம் செய்யும் நிலைமை ஏற்படும்.

❑ கரீபியன் நாடுகளுக்கிடையில் உல்லாசப் பயணக் கப்பல் சேவைகளை நடாத்தி வரும் அமெரிக்கக் கொம்பனிகள் தமது பயண மார்க்கத்தில் கியூபத் தலைநகர் ஹவானாவையும் இணைத்துக் கொள்வார்கள்.

❑ கியூபாவின் எல்லைப் பிரதேசத்துக்குள் 4.6 பில்லியன் பீப்பாய்கள் வரையிலான எண்ணெய் வளமும், பாரியளவு இயற்கை எரிவாயுவும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அவற்றை அகழ்ந்தெடுக்கும் வாய்ப்புக்காக அமெரிக்க நிறுவனங்கள் நாவில் நீர் ஊறக் காத்திருக்கின்றன.

❑ இப்பொழுது கியூபா தனது உணவுத் தேவையில் 80 வீதமானதை இறக்குமதி மூலமே பெற்று வருகிறது. கியூபா மீதான அமெரிக்கப் பொருளாதாரத் தடை நீங்கும் பட்சத்தில், அமெரிக்கக் கொம்பனிகள் அங்கு விவசாயத்துறையில் பாரிய முதலீடுகளைச் செய்யத் தயாராகி வருகின்றன.

❑ அமெரிக்கத் தொலைத் தொடர்பு மற்றும் இலத்திரனியல் நிறுவனங்கள் கியூபாவில் பெரும் முதலீடுகளைச் செய்ய ஆர்வமாக உள்ளன.

❑ அமெரிக்கக் கண்ட நாடுகளிலேயே கியூபாவில்தான் சிசு மரண வீதம் மிகக் குறைவு. அதற்குக் காரணம் அந்த நாட்டில் இருக்கும் உலகிலேயே மிகச் சிறந்த வைத்திய சேவையாகும். அமெரிக்க - கியூப உறவு சமுக நிலையை அடைந்தால், பல இலட்சம் அமெரிக்கர்கள் கியூபாவின் மிக மலிவான வைத்திய சேவையைப் பெறுவதற்கு அங்கு செல்வார்கள்.

இப்படி இன்னும் பலப்பல.

ஆனால் அமெரிக்கர்களின் இந்த எதிர்பார்ப்புக்களை இரத்தம் சிந்தி உருவாக்கப்பட்ட கியூபாவின் புரட்சிகர சோசலிச அரசாங்கமும், தமது நாட்டின் மகோன்னதமான சோசலிச அமைப்பையும், விலை மதிக்க முடியாத நாட்டின் இறைமையையும் கட்டிக்காத்து வரும் கியூப மக்களும் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள் என்பதை உலகம் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறது.

(நன்றி: வானவில் 54)

## தி போட்டோகிராபிக் டிக்ஷனரி


THE PHOTOGRAPHIC DICTIONARY

01. SEARCH 02. ABOUT 03. SUBSCRIBE 04. ARCHIVE 05. RANDOM

NEWER OLDER

Manuel Dominguez, Jr.: youth

youth [yooth]

–noun

1. the time of being young; early life: His youth was spent on the farm.

2. the appearance, freshness, vigor, spirit, etc., characteristic of one who is young.

3. the period of life from puberty to the attainment of full growth; adolescence.

**http://thephotographic-dictionary.net/**

இணையத்தில் எத்தனையோ அகராதிகளைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் தி போட்டோகிராபிக் டிக்ஷனரி போல வித்தியாசமான இணைய அகராதியை பார்த்திருக்க மாட்டீர்கள். இந்த டிக்ஷனரியில் அப்படி என்ன வித்தியாசம் என்றால் வார்த்தைகளுக்கு இது காட்சி விளக்கமாக பொருள் தருகிறது. அதாவது குறிப்பிட்ட வார்த்தையை உணர்த்தக் கூடிய ஒரு புகைப்படத்தை இந்த அகராதி முன்வைக்கிறது. அதோடு அந்தப் புகைப்படத்தின் கீழ் வழக்கமான அகராதி விளக்கமும் கொடுக்கப் பட்டுள்ளது.

முகப்புப் பக்கத்தில் வரிசையாக ஆங்கில எழுத்துக்கள் அகரவரிசையில் இடம்பெற்றிருக்கும். அதில் ஒரு எழுத்தைத் தேர்வு செய்து அந்த எழுத்தில் தொடங்கும் வார்த்தைகளை கிளிக் செய்தால் அந்த வார்த்தைக்கான புகைப்படத்தைப் பார்க்கலாம். வார்த்தைகளின் பொருளுடன் புகைப்படம் பொருந்தும் விதம் பெரும்பாலும் கச்சிதமாகவே இருக்கிறது. ஒவ்வொரு படத்துடனும் தொடர்புடைய மற்ற சொற்களையும் பார்க்கலாம்.

இதில் உள்ள வார்த்தைகளைத்தான் பார்க்க முடியும் அகராதி போல தேடமுடியாது என்றாலும் மிகவும் சுவாரஷ்யமான அனுபவத்தை அளிக்கக் கூடிய இணையத்தளம். இதில் உள்ள புகைப்படங்கள் இணையவாசிகளால் சமர்ப்பிக்கப்பட்டவை என்பதால் நீங்களும் கூட சமர்ப்பிக்கலாம். லிண்டா வாரென் எனும் அமெரிக்கப் புகைப்படக் கலைஞரின் கைவண்ணம் இந்தத் தளம்.

## அவதாரை மிஞ்சும் டைனோசர்!

உலகம் முழுவதும் பெருவாரியான ரசிகர்களின் ஆதரவைப் பெற்ற, ஹொலிவுட்டின் பிரமாண்ட இயக்குநர் ஸ்டீபன் ஸ்பீல்பெர்க் இயக்கிய, “ஜுராசிக் பார்க்” படத்தின் நான்காவது பாகமான, “ஜுராசிக் வேர்ல்ட்” தற்போது வெளியாகியுள்ளது.

இப்படத்தை கொலின் ட்ரேவர் என்பவர் இயக்கியுள்ளார். டைனோசரை மையமாக வைத்து தயாரிக்கப்படும் படங்களுக்கு, ஹொலிவுட்டில் சிவப்பு கம்பள வரவேற்பு உண்டு. அது போல், இப்படத்துக்கும் உலகம் முழுவதும் சிறப்பான வரவேற்பு கிடைத்துள்ளது.



வெளியான, முதல் நான்கு நாட்களிலேயே, 8,500 கோடி ரூபாய் வசூலை குவித்துள்ளது. இதுவரை ஹொலிவுட் படங்களில் அதிக வசூலை குவித்த படம் என்ற பெருமையை, “அவதார்” படம் பெற்றிருந்தது. அச்சாதனையை, “ஜுராசிக் வேர்ல்ட்” படம் முறியடிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

பொலிவுட்டில் மாற்றி மாற்றி வெற்றிப்படங்களைக் குவித்துக் கொண்டிருப்பவர்கள் மூன்று கான்கள் 1. அமீர்கான் 2. ஷாரூக்கான் 3. சல்மான்கான்

இதில் மூத்தவரான அமீர்கான் இந்த ஆண்டு மார்ச் 14 – ஆம் திகதி 50 வயதைத் தொட்டார்.

அடுத்து ஷாரூக்கான். இவருக்கு வரும் நவம்பர் 2 – ஆம் திகதி 50 வயதாகிறது.

அடுத்து இளையவர் சல்மான்கானுக்கு வரும் டிசம்பர் 27 – ஆம் திகதி 50 வயதாகிறது.

ஒரே சமயத்தில் மூன்று பேரும் ‘50’ஐ தொட்டு, அதேசமயம் பொலிவுட்டையும் கலக்குவது அதிசயம்தானே!




கருத்து என்பதை எதிர்கொள்வதிலும், பரப்புவதிலும் மொழி முதலிடத்தில் இருக்கிறது. கல்வி வழியாகவே மொழி பரவுகிறது. புரிதல் என்பதை எளிதாக்குகிறது.

எனவே, மொழியில் அன்பை வெளிப்படுத்தும் சொற்கள், பரிவான சொற்கள், கிளர்ச்சியைத் தூண்டும் சொற்கள், சரணாகதிச் சொற்கள், தற்கொலைக்கு அழைத்துச் செல்லும் சொற்கள் என்று பலவிதமான பல்லாயிரம் சொற்கள் இருக்கின்றன. மொழியே கருத்தாகவும் ஆகி விடுகிறது. எனவே, கருத்துக்கு பரிமாணமும், அர்த்தமும் கொடுக்கும் விதத்தில் சொல்லைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது.

ஆகையால்தான், திருவள்ளுவர் “வெல்லும் சொல் இன்மை அறிந்து” சொல்ல வேண்டும் என்றார். சொல்லும் சொல்லின் மகத்துவம் அறிந்தவர் அவர். “கனி இருப்ப காய் கவர்ந்தற்று” என்று கவிஞர்களுக்கு மட்டுமல்ல, எல்லா மக்களுக்கும் அவர் சொல்லியிருக்கிறார்.

சொல்லே பிரதானமாக இருந்த ஒரு காலத்தில் வாழ்ந்தவர் சோக்ரடீஸ். அவர் அரசியல், சமூக, கலாசார மேம்பாடு, முன்னேற்றம் பற்றி இளைஞர்களிடம் கூறினார்:

“உங்களைப் பற்றி நன்றாகச் சிந்தனை செய்யுங்கள். யார் சொன்னதையும் நம்பாதீர்கள். உங்கள் அறிவால் அறிந்து கொண்டு செயற்படுங்கள்” என்றார். அதாவது, அவரால் சொல்லப்பட்டதன் வழியாகச் சொல்லப்படாதது என்னவென்றால்.

# திடீர் மயக்கம் ஏன்?

சிலருக்கு திடீரென மயக்கம் வருவதுண்டு. ஆனால் இந்த மயக்கம் அதிகபட்சமாக இரண்டு நிமிடங்கள் மட்டுமே இருக்கும். அந்த நேரத்தில் மூளைக்கு இரத்தம் செல்வது குறையும். இந்த மாதிரி திடீரென மயங்கி விழுவதற்கு "நஹ்ய்ஸ்ரீர்ல்ங்" எனப் பெயர். இப்படி திடீரென மயக்கம் வரும்போது உடம்பில் வலு போய்விடும். முகத்தின் வண்ணம் மாறும். உடம்பு பலவீனமாக ஆவதுடன் பார்வையில் குளறுபடி; குமட்டல் ஆகியவையும் ஏற்படும்.

ஆனால் இப்படி திடீரென மயக்கம் வந்து, மீளுவது குறித்து அதிகமாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. ஆனால் சில வியாதிகளுக்கு இது முன்னறிவிப்பாக இருக்கலாம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திடீர் மயக்கம் ஏற்பட பல காரணங்கள் உண்டு.

பயம், உணர்ச்சிவசப்படுதல், கடும் வலி, இரத்த அழுத்தத்தில் திடீர் மாற்றம், மூச்சுத்திணறல், அதிகமாக வியர்த்தல், ஒரே நிலையில் நீண்ட நேரம் நிற்பதால் மற்றும் "ஓவர் குடி" என பலவற்றால் திடீர் மயக்கம் ஏற்படலாம்.

உங்களுக்குத் தெரியுமா? உலகின் பல பிரபல மனிதர்களுக்கு இத்தகைய மயக்கங்கள் நிகழ்ந்துள்ளன.



**சாள்ஸ் டார்வின்** : (1809 - 1882) தன்னுடைய "Origin of species" என்ற புத்தகத்தில் எப்படி வலுவாக வாழ்வது எனத் தெரிவித்திருப்பார். ஆனால் இவருக்கு அடிக்கடி இந்த வியாதி வருவதுண்டு. 1835 ஆம் ஆண்டு தென்ஆபிரிக்காவுக்கு இவர் பயணித்தபோது, அங்கு அவரை ஒரு நுளம்பு கடித்திருக்கலாம். அதன் மூலம் அவருக்கு இந்த நினைவு தப்புதல் தொடர் கதையாக இருக்கலாம். இந்த நுளம்பின் இரத்தம் உடலில் கலந்தால், பல ஆண்டுகள் கடந்தும் அப்படியே இருக்குமாம். இதற்கு அந்தக் காலத்தில் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இதற்கு "சாகாஸ்" என்ற பெயர் பின்னாளில் ஏற்பட்டது. சாகாஸ் என்பவர்... நுளம்பை ஆய்வு செய்து இதனைக் கண்டுபிடித்தார். அவர் பெயரையே வியாதிக்குச் சூட்டிவிட்டனர்.



**சாள்ஸ் டிக்கன்ஸ்:** பிரபல எழுத்தாளர். தலைசிறந்த நடிகரும்கூட. அந்தக் காலத்தில் எழுதியவற்றை அங்கீகாரத்திற்காக, நாலு பேர் முன்னிலையில் படிப்பது உண்டு. சாள்ஸ் டிக்கன்ஸ் தான் எழுதியதை சிறந்த நடிகர்போல் ஏற்ற இறக்கத்துடன் மிகச்சிறப்பாகப் படிப்பார். இப்படி படிக்கும்போது அவர் உணர்ச்சிவசப்படுவார். விளைவு: சிலசமயம் மேடையிலேயே மயங்கி நினைவு தப்புவார். இவர் உடலில் வேண்டாதது புகுந்து பாடாய்ப்படுத்தி வைக்கிறது எனவும் சிலர் கூறுவது உண்டு. இதனால் 57 வயதிலேயே 1870-இல் இவர் இறந்து போனார்.



**சிக்மண்ட் ஃப்ராய்ட்:** "சைக்கோ அனாலிசிஸ்"-ஸை அறிமுகப்படுத்திய பெருமை சிக்மண்ட் ஃ.ப்ராய்ட் (1856 - 1939)க்கு உண்டு. இவர் வாழ்க்கையில் பலமுறை மயங்கி விழுந்து மீண்டவர். தனது பங்காளியான கார்ல் ஜங் என்பவருடன் விவாதத்தில் இறங்கி பலசமயம் அடிக்கடி மயங்கி விழுவாராம். எல்லாம் சொத்துப் பிரச்சினைதான். குடும்ப வாரிசான தன்னைக் கொன்று வீட்டையும் சொத்தையும் அபகரிக்க எண்ணுகிறார் என்ற பயமே.... இந்த மயங்கி விழுதலுக்குக் காரணம் என மருத்துவர்கள் கூறினர். ஆனால் ஃ.ப்ராய்ட் தன்னை மாற்றிக் கொள்ளவில்லை!



**மேடம் க்யூரி:** (1867 - 1934) இந்த மயங்கி விழுதலுக்கு பலமுறை ஆளானவர். அறிவியல், இரசாயனத்தில் 1903, 1911-ஆம் ஆண்டுகளில் நோபல் பரிசு பெற்றவர். நோபல் பரிசு பெற்ற முதல் பெண். பாரிஸ் பல்கலைக்கழகத்தின் முதல் பெண் பேராசிரியர். ஏழையாக இருந்தவர். பல சமயங்களில் பாணும் தேநீரும்தான் இவர் உணவு. பட்டினியாலேயே அவர் மயங்கி விழுந்தது உண்டு.



**ஜே.பி. மோர்கன்:** அமெரிக்க பொருளாதாரத்தில் வெற்றிக்கொடி நாட்டியவர். வங்கியாளர். கலையம்சப் பொருட்களைச் சேகரிப்பது இவரின் பொழுதுபோக்கு. 15 வயதிலேயே நரம்பு வலியால் துடித்தவர். நரம்பு சார்ந்தே இவர் அடிக்கடி மயக்கம் அடைவார்.



**லேடி காகா:** பிரபல பொப் பாடகி லேடி காகா சமீபத்தில் தன்னுடைய நியூஸ்லாந்து நாட்டுச் சுற்றுப்பயணத்தின்போது அடிக்கடி மயங்கி விழுந்தார். ஆனால் அதற்கு தன் உடல் நிலை காரணம் அல்ல. மாறாக பயண ("ஜெட்லொக்") அலுப்புதான் எனக் கூறினார். இவரும் மேடையில் பல சமயங்களில் மயங்கி விழுந்ததுண்டு.

# கருத்து: சுதந்திரமும் பொறுப்பும்!

- சா. கந்தசாமி -



"நீங்கள் சரியானவர்களால் ஆளப்படவில்லை. எனவே, புதிய ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுங்கள்" என்பதுதான்.

அது ஆட்சியாளர்களுக்குத் தெரிந்து போனது. எனவே, சோக்ரடீஸ் ஆபத்தான ஆளானார். அவர் சொன்ன கருத்துக்காக நஞ்சு குடித்து சாக வேண்டுமென்று ஆட்சியாளர்கள் ஆணையிட்டார்கள். நல்ல குடிமகனாகிய அவர், மறுப்பு ஏதும் சொல்லாமல், நஞ்சைப் பருகி மாண்டார். தனது கருத்துக்காக மாண்டுபோன அவர்தான் சரித்திரத்தில் இன்றும் ஜீவிதமாக இருக்கிறார்.

அசலான, முன்னேற்றமான கருத்தொன்று சொல்லப்படும்போது, மரபுவாதிகள், பழைமையின் மீது ஈடுபாடு கொண்டோர் அதனை ஏற்று அங்கீகரிப்பதில்லை. அப்படி ஏற்பது, தங்களின் அதிகாரத்தைப் பறித்து விடும் என்றும், செல்வாக்கைக் குறைத்து விடும் என்றும் பயப்படுகிறார்கள். பயமே பழைமையைப் போற்றுவதில் ஆதாரமாக இருக்கிறது.

சமூக நலன் பற்றிச் சிந்தனை செய்கிறவர்கள், பழைமைவாதிகளுக்கு மட்டுமல்ல, பெரும்பான்மையான மக்களுக்கும் உவப்பாக இல்லாத கருத்தைச் சொல்வதுதான் கருத்து சுதந்திரம். அது சுதந்திரம் என்று சொல்லப்படும் எல்லாவற்றையும்விட தலையாய சுதந்திரம்.

அந்த சுதந்திரத்தை எவருக்கும் ஒரு நபரோ, ஒரு நிறுவனமோ, ஒரு நாடோ கொடுப்பதில்லை. பிறப்பின் வழியாக ஒவ்வொரு மனிதனும் பெற்றிருப்பது. அதனை யாரும் பறிமுதல் செய்ய முடியாது. இதனை சொல்லித்தான் போராடி வருகிறார்கள்.

தங்கள் சமயந்தான் இன்மையில் நல்வாழ்க்கை வாழ வழி காட்டக்கூடியது என்றும், மறுமையில் மோட்ச சாம்ராஜ்யத்திற்கு இட்டுச் செல்லக் கூடியது என்றும் சொல்கிறார்கள். எனவே, அவர்களுடைய சமயத்தின் மீது வைக்கப்படும் விமர்சனங்களை அவமரியாதையான கருத்து என்று சொல்லி அடக்க முன்வருகிறார்கள்.

கருத்து சுதந்திரம் வேண்டுகிறவர்கள் அடங்கி ஒடுங்கி இருப்பதில்லை. அவர்கள் ஏற்படுத்தும் கலவரமே பல சமய சிந்தனைகளில் பெரும் கருத்து மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

நமது மரபில் மாற்றுக் கருத்துக்கு, எதிர்க் கருத்துக்கு எப்போதும் இடம் உண்டு. அது நெடு நாளைய மரபு.

"இறைவன் இருக்கிறான். அவன் பல நாமங்கள் கொண்டு, பல வடிவங்களில் இருக்கிறான். அலகிலா விளையாட்டை உடைய இறைவன், உலகத்தைப் படைத்து காத்து வருகிறான்" என்று திருவிழாக்கள், புனித யாத்திரைகள் மேற்கொள்ளுகிறவர்களிடம்,"கடவுள் இல்லை, அவன் உலகத்தைப் படைக்கவில்லை, கடவுள் மனிதனால் படைக்கப்பட்டான்" என்று சொன்னவர்களைப் பகைத்துப் புறந்தள்ளவில்லை.

"அவர்கள் நாத்திகம் என்னும் கருத்துக் கொண்டவர்கள். அவர்களும் எங்கள் சமயம் சார்ந்தவர்கள்" என்று இந்து சமயம் அவர்களை அரவணைத்துக் கொண்டது.

எதிரான கருத்தை ஏற்பதுதான் வாழ்க்கை. பல சமூகங்கள் அதனை ஒரு பண்பாகவே கொண்டிருக்கின்றன.

தமிழர்கள், "எங்கள் மொழி மூவாயிரம் ஆண்டுகள் பழைமையானது. ஆனாலும் சீரிளமை கொண்டது. உலகத்து முதல் மொழி தமிழ்" என்று பெருமையுடன் பாராட்டிக் கொண்டிருந்தபோது, "தமிழ் ஒரு காட்டுமிராண்டி பாஷை" என்றார் பெரியார்.

"உரைசால் பத்தினி கண்ணகி கதையைச் சொல்லும் தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது, "அது ஆபாச காப்பியம்" என்று விமர்சனம் வைத்தார் அதே பெரியார்.

தமிழர்கள் பெரியார் மீது கோபம் கொள்ளவில்லை. அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யவில்லை. கருத்துச் சொன்னதற்காக மன்னிப்பு கேட்க வேண்டும் என்று பேரணி, கதவடைப்பு செய்யவில்லை. "அவர் பெரியார். அவர் கருத்துகள் இருக்கட்டும்" என்று தமிழ்ப் புகழ்பாடிக் கொண்டும், கண்ணகிக்குப் பத்தினி கோட்டம் கட்டிக் கொண்டும் இருந்தார்கள்.

உலகம் முழுவதும் பேசப்பட்ட பேச்சுக்கும், எழுதப்பட்ட புத்தகங்களுக்கும் எதிராக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

பழைமையான கலாசாரம் கொண்ட சீனாவில், ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஹன் அரசு வம்சத்தினர், தங்கள் பரம்பரையைச் சிலர் பழித்து எழுதினார்கள் என்று எழுதப்பட்ட எல்லாப் புத்தகங்களையும் பறிமுதல் செய்து எரித்தார்கள்.

கார்ல் மார்க்ஸின் கம்யூனிஸ்ட் அறிக்கை பல ஐரோப்பிய நாடுகளில் தடை செய்யப்பட்டு எரிக்கப்பட்டது. சிறுவர்களுக்கான புத்தகமான "ஆலீஸ் அதிசய உலகம்" தடை செய்யப்பட்டது. பதினான்கு வயது சிறுமி ஆனி பிராங் டைரி ஆபாச புத்தகம் என்று கொளுத்தப்பட்டது.

உலகம் முழுவதிலும் தடை செய்யப்பட்ட, எரிக்கப்பட்ட புத்தகங்களின் பெயர்கள் அடங்கிய நீண்ட பட்டியல் ஒன்று இருக்கிறது. அந்தப் பட்டியலில் மகத்தான பல புத்தகங்களும், உலக வரலாற்றையே அடியோடு மாற்றியமைத்த புத்தகங்களும் இருக்கின்றன என்பதுதான் அறிய வேண்டிய முக்கிய செய்தி.


சமூக பிரக்ஞையுடன், சமூக மேம்பாட்டிற்காக எழுத வருகின்ற எழுத்தாளர்கள், எழுதுவதற்கு முன்னேதான் சிந்தனை செய்கிறார்கள். எழுதி முடித்த பின்னர் - அதன் விளைவுகளை எதிர் கொள்வதில் பின்வாங்குவதில்லை.

தன் பேச்சு - எழுத்து என்பதற்கு முழுப் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள். கருத்துச் சுதந்திரம் என்பது இத்தகைய பொறுப்புணர்வால்தான் அர்த்தம் பெறுகிறது.




# முட்டாளுக்குப் புத்தி சொன்னால்?

ஒரு காட்டில் பல குரங்குகள் கூட்டமாக வசித்து வந்தன குளிர் காலத்தில் ஒருநாள் மிகவும் கடுமையான குளிராக இருந்தது குரங்குகளால் குளிரைத் தாங்க முடியவில்லை கொஞ்சம் நெருப்புக் கிடைத்தால் சருகுகளைப போட்டுத் தீ மூட்டி குளிர் காயலாம் என்று ஒரு கிழட்டுக் குரங்கு கூறிற்று நெருப்புக்கு எங்கே போவது என்று குரங்குகள் யோசித்துக் கொண்டிருந்த போது ஒரு மின் மினிப் பூச்சி பளிச் பளிச் சென்று மின்னியவாறு பறந்து சென்ற கொண்டிருந்தது. அதைக் கண்ட ஒரு குரங்கு அதோ நெருப்பு போகிறது என்று கூறிற்று மற்றொரு குரங்கு அந்த மின்மினிப் பூச்சியைப் பிடித்து வந்து தரையில் போட்டது. மற்ற குரங்குகள் சுற்றிலும் கிடந்த குப்பை கூழங்களைச் சேகரித்து வந்து மின்மினிப் பூச்சி மீது போட்டன பிறகு குரங்குகள் நெருப்பு கொழுந்து விட்டு எியப போகிறது என எதிர்பார்த்து சூழ்ந்து அமர்ந்து கொண்டன ஆனால் தீ எரியும் வழியைக் காணோம் பிறகு குரங்குகள் வாயினால் குப்பையை ஊதி நெருப்பை எரிய விடும் முயற்சியில் ஈடுபட்டன



மரதத்தில் அமர்ந்து குரங்குகளின் கோமாளிக் கூட்டத்தைக் கவனித்துக் கொணடிருந்த ஒரு பறவை கலகலவென்று சிரித்த படி மரத்தை விட்டி றங்கி கீழே வந்து அமர்ந்து பிறகு குரங்குகளை நோக்கி நண்பர்களே மின்மினிப் பூச்சியை நெரு ப்பு என்று எண்ணிக் கொண்டு தீ மூட்ட வீண் பிரயாசை எடுக்கிறீர்கள் நீங்கள் என்ன தான் வாயால் ஊதி னாலும் மின்மினிப் பூச்சியிடமிருந்து நெருப்பு வரவே வராது வீண் வேலையை விட்டு விடுங்கள் என்று புத்தி மதி கூறிற்று உனக்கு ஒன்றும் தெரியாது

வாயை மூடிக் கொண்டு உன் வேலையைப் பார் என்று கூறிவிட்டு குரங்குகள் மறுபடியும் குப்பையை வாயால ஊதித் தீ உணடாக்க முயற்சியெடுத்தன பறவை குரங்குகளின் முட்டாள்தனத்தை எண்ணிப் பரிதாபப்பட்டு திரும்பத் திரும்ப குரங்குகளுக்கு புத்திமதி கூறிக் கொண்டிருந்தது. இதனால் கோபமற்ற குரங்குகள் பறவை மீது பாய்ந்து அதனைப் பிடித்து தரையில் மோதிக கொன்று விட்டன

# கருவிகளும் பயன்களும்

01. ஏரோமீற்றர் (Aerometer)- காற்று மற்றும் வாயுக்களின் எடை மற்றும் அடர்த்தியை அளக்கும் கருவி.

02. அம்மீற்றர் (Ammeter)- மின்சாரத்தின் அளவீட்டை கணக்கிடுவது.

03. ஓடியோமீற்றர் (Audiometer)- மனிதர்களின் கேட்கும் திறனை கணக்கிடும் கருவி.

04. போலோமீற்றர் (Bolometer)- வெப்பக் கதிர்வீச்சின் அளவை கணக்கிடும் கருவி.

05. கிரையோமீற்றர் (Cryometer)- குறைவான வெப்பநிலையை அளவிடும் கருவி.

06. எலெக்ரோ டைனமோமீற்றர் (Electro Dynameter)- மின்சாரம், வோல்டேஜ், திறன் எல்லாவற்றையும் மொத்தமாக அளவிடும் கருவி.

07. மனோமீற்றர் (Manometer)- வாயுவின் அழுத்தத்தைக் கணக்கிடும் கருவி இது.

08. டோனோமீற்றர் (Tonometer)- ஒலியின் அளவை அளவிடும் கருவி.

09. வெர்னியர் (Vernier)- சென்டிமீற்றர் அளவைவிட மிகக் குறைவான அளவீட்டை அளக்கும் கருவி.

10. பைரோமீற்றர் (Pyrometer) - அதிகபட்ச வெப்பநிலையை அளவிடும் கருவி.

11. பாத்தோமீற்றர் (Fathometer)- ஒலி அலைகளைப் பயன்படுத்தி கடலின் ஆழத்தை அளவிடும் கருவி.

12. டைனமோ (Dynamo)- எந்திர ஆற்றலை மின்சார ஆற்றலாக மாற்றும் கருவி.

13. வேவ்மீற்றர் (Wavemeter)- ரேடியோ அலைகளின் அலை நீளத்தை அளவிடும் கருவி.

14. பிளானிமீற்றர் (Planimeter)- பரப்பை அளவிடும் கருவி.

15. ரெக்ரிஃபையர் (Rectifier)- ஏ.சி. மின்சாரத்தை டி.சி. மின்சாரமாக மாற்றும் கருவி.

16. ரென்சிமீற்றர் (Tensimeter)- ஆவியின் அழுத்தத்தை அளவிடும் கருவி.

# வர்ணம் தீட்டலாம் வாங்க!



# உயிரினங்கள் பற்றிய சில தகவல்கள்

* மனிதனுடன் உலகில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. அவை மனிதனை விட சில விஷயங்களில் அதிக ஆற்றல் மிக்கவையாக இருக்கும். அவற்றைப் ப்ற்றிப் பார்ப்போம்.

* சீல்கள் மணிக்கு 23 கி.மீ. வேகத்தில் நீந்தும்.

* ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.

* கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்கும்.

* பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.

* மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்தும்.

* உலகில் முதுகெலும்புடன் தோன்றிய முதல் உயிரினம் மீன்.

* உலகிலேயே அதிக குரங்கினங்கள் வாழும் நாடு பிரேசில்.

* குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்கும்.

* புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும் திறன் படைத்தது.

* ராஜஸ்தான் பறவைகள் சரணாலயத்தில் 374 பறவை இனங்கள் இருக்கின்றன.

* இந்தியாவில் இந்திராகாந்தி சரணாலயத்தில் மட்டுமே எறும்புத்தின்னி உள்ளது.

* காளான்களில் சுமார் 70 ஆயிரம் வகைகள் உள்ளன.

# அணைகளும் மாநிலங்களும்

1. நாகர்ஜுன சாகர் நீர்த்தேக்கம் (ஆந்திர மாநிலம் ) -
கிருஷ்ணா நதியின் குறுக்கே கட்டப்படடுள் ளது, விவசாயம் மற்றும் நீர்மின்சக்திக்காக இந்த நீர்த்தேக்கத் திட்டம் பயன்படுகிறது.

2. கக்கார்பாரா நீர்த்தேக்கம் (ஆந்திர மாநிலம்)-
தபதி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. விவசாயத்திற்காக கட்டப்பட்டுள்ளது.

3. கோஷி நீர்த்தேக்கம் (பீகார் மாநிலம்)-
கோஷி நதியின் குறுக்கே கட்டப்பட் டுள்ளது. மழைக்காலத்தில் அபாயகரமான வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கும், நீர்மின்சக்தித் திட்டத்துக்கும் இந்த நீர்த்தேக்கம் பயன்படுகிறது.

4. சபரிகிரி நீர்த்தேக்கம் (கேரள மாநிலம்)-
பம்பா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. நீர்மின்சக்தித் திட்டத்துக்காக பயன்படு கிறது.

5. சாராவதி நீர்த்தேக்கம் (கர்நாடக மாநிலம்)-
ஜோக் நீர்வீழ்ச்சியை ஒட்டியுள்ள சாராவதி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. நீர்மின்சக்தி உற்பத்திக்காக இத்திட்டம் பயன்படுகிறது.

# வில்லியம் சொக்லி

டிரான்சிஸ்டரைக் கண்டு பிடித்த மூவருள் ஒருவர். பிரித்தானியாவில் பிறந்த அமெரிக்க இயற்பியலாளர். இவருக்கும் இவருடன் சேர்ந்து டிரான்சிஸ்டரைக் கண்டுபிடித்த ஜோன் பார்டீன் வால்ட்டர் பிரட்டன் ஆகியோருக்கும் 1956 ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்படடது வில்லியம் சொக்லி (William Bradford Shockley 13.02.1910 பிறந்தார். 12.08.1989 இல் இறை வனடி சேர்ந்தார் என்பது குறிப்பிட தக்கது



# பின்தங்கிய மக்களின் வாழ்வில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்

## சமூக மேம்பாட்டு இணையத்தின் செயலாளர் கருத்து

கல்வி, பொருளாதாரத்தில மிகவும் பின்தங்கிய மக்களிடையே தமது வாழ்நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே தமது பிரதான இலக்காக இருப்பதாக சமூக மேம்பாட்டு இணையத்தின் செயலாளர் ப.கேசவதாசன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை, மூளாய் முதலியார் கோவிலடி பொது நோக்கு மண்டபத்தில் அப்பகுதியில் வாழும் பின்தங்கிய மக்களுக்காக நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழிபபுணர்வுக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேம்பாட்டு இணையத்தின் தலைவர் க.புஷ்பராஜா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் நிலையை கவனத்திற்கொண்டு உரையாற்றிய செயலாளர் மேலும் தமது உரையில்,

அன்றாட வாழ்க்கை நெருக்கடிகளை சமாளிக்கவென அயராது பாடுபடும் வறிய மக்கள் தம்மைச் சுற்றி உண்மையில் என்ன நடைபெறுகின்றது என்பதைப் புரிந்து கொள்ள முடியாதவர்களாகவே வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்த நிலைமைக்கு அவர்களிடத்தில் நிலவும் போதிய கல்வியறிவு இன்மையே பிரதான காரணமாகும்.

குறிப்பாக பெற்றோர்களிடத்தில் நிலவும் இக்குறைபாடு காரணமாக தமது பிள்ளைகள் முறையான கல்வியை தொடர்வதில் எதிர் கொள்ளும் சிரமங்களை புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

அநேகமான குடும்பங்களில் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்ட பெற்றோர் தமது உடலுழைப்பாகக் கிடைக்கின்ற கூலி வருமானத்தை தமது பிள்ளைகளின் கல்விக்காக முன்நிலைப்படுத்துவதற்கு பதில் மதுவுக்காகவே அவற்றை செலவிடுகிறார்கள் இது உண்மையில் ஒரு துர்ப்பாக்கியமான நிலைமையாகும்.

போதையில் எம் அயலவர்களிடையே மோதிக்கொண்டு அதற்காக நீதிமன்றில் வழக்காட சட்டத்தரணிகளுக்கு பணத்தைவாரியிறைக்க அந்தக்கால சூழலில் உழைத்த பணத்தையெல்லாம் செலவிட்டு பரம ஏழைகளாகிவிட்டஎம் மூதாதையரின் அலட்சியமான வாழ்க்கையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உழைப்பில் எதுவும் மீதமில்லாமை காரணமாக எமது கிராமத்தில் மக்களின் பொதுப் பணிக்காக உதவுவது என்கிற சிந்தனையில் இருந்து பல ஆண்டுகளாக நாம் தூர விலகியே வாழ்ந்து வருகிறோம்.

கல்வியிலும் அவ்வாறே பொருளாதாரத்திலும் பின் தங்கிய நிலை காரணமாக அவ்வப்போது தேர்தல்கள் வரும் போதெல்லாம் அற்பசலுகைகளை பெறுவதற்காக அடிபட்டுக்கொண்டு எமக்கான உண்மையான சரியான பிரதிநிதியை தெரிவு செய்வதில் தொடர்ந்து தவறிழைப்பவர்களாகவே நாம் வாழ்ந்து வருகிறோம்.

இந்நிலை மாறவேண்டும் இனிவரும் காலத்திலாவது எமக்கான சரியான வகையில் தலைமைத்துவம் குறித்து நாம் கவனம் செலுத்த தவறுவோமாயின் எமது இளம் சந்ததியினரின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகி விடும் என்பதையும் இவ்விடயத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்துவரும் 53 சனசமூக நிலைய பிரிவுகளை உள்ளடக்கி இப்பகுதி மக்களை முறையாகப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 33 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகமொன்றை ஏற்படுத்தியுள்ளோம்.

இதனை அடித்தளமாகக்கொண்டு யாழ்.மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் வாழும் பின்தங்கிய மக்களை கவனத்திலெடுத்து பணிகளை விரிவுபடுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கூட்டத்தில் உரையாற்றிய தலைவர் க.புஸ்பராஜா, சமூக மேம்பாட்டு இணையத்தின் கொள்கைகள் நோக்கங்களையும் அதன் எதிர்கால திட்டங்கள் குறித்து விளக்கி உரையாற்றினார்.

இச்சந்திப்பில் மேப்பாட்டு இணையத்தின் மூளாய்ப்பகுதிக்கான உறுப்பினர்கள் பொது அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# பிறிதொரு நிலையத்திலும் வாக்களிப்புக்கு ஏற்பாடு

வாக்காளர் ஒருவர் விரும்பும் பட்சத்தில் பிறிதொரு வாக்கெடுப்பு நிலையத்தில் தனது வாக்கைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணையாளர் மேற்கொண்டுள்ளார்.

பிரதேசத்தின் நிலைமை காரணமாக வாக்காளர் வாக்களிப்பு நிலையத்திற்கு செல்ல முடியாத சந்தர்ப்பங்களை கவனத்திலெடுத்து இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை தமது மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகம், பிரதேசெயலர் மற்றும் கிராம சேவையாளரிடத்திலும் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு கிராமசேவகரால் விண்ணப்பம் உறுதிப்படுத்தப்படுவது கட்டாயமெனவும் தவறின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படு மெனவும் தேர்தல்கள் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



காரைநகர் ஸ்ரீ சிதம்பரமேஸ்வர சிவகாமி அம்மன் ஆலய வருடாந்த பஞ்சரத பவனி அண்மையில் இடம்பெற்ற போது... (50)

# பதிவிருக்கப் பெட்டகம்

மஹிந்த மீண்டும் எழுச்சி பெறுவார் என்பது கடந்த ஜனவரி தேர்தலின் பின்னர் உடனடியாக தென்படவில்லை. ரோமாபுரியில் சீசரின் சதிக் கொலையின் [இறப்பின்] பின்னர் யார் பதவி ஏற்பது என்ற குழப்பம் நிலவியது போல எதுவும் இலங்கையில் நிகழவில்லை. உலகில் எங்கு மில்லாத ஆட்சி உடனடியாக தயார் நிலையில் வைக்கப்பட்டு நிறுவப்பட்டது. சிறுபான்மை எதிரணியின்ரிலிருந்து அரசத் தலைவர் [பிரதமர்] நியமிக்கப்பட்டார். பதவியில் இருந்த உச்ச நீதிமன்ற நீதியரச்ர், மொஹான் பீரிஸ் பதவி இறக்கப்பட்டார், மீளவும் பதவி நீக்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதிபதி சிராணி பண்டார நாயகா உயர் நீதிமன்ற நீதிபதி யாக சடங்குக்கு பதவி ஏற்று, மறுகணமே இராஜினாமா செய்து கொண்டார். பொன்சேகா குடியுரிமையை மீளப் பெற்றார், பீல்ட் மார்ஷல் ஆக நியமிக்கப்பட்டார். அவரின் பெயரில் வீதி பெயரிடப்பட்டது. பீல்ட் மார்ஷல் ஒருவர் ஒர் அரசியல் கட்சியின் தலைவராக இருக்க முடியும், தனது நாடாளுமன்றத்தில் பறிபோன பதவிக்கு வழக்காட முடியும், மீண்டும் தேர்தல் நடவடிக்கைகளில் அந்தப் பதவியில் இருந்து கொண்டே ஈடுபட முடியும் என்பதெல்லாம் உலகில் எங்கும் நடைபெறாத சம்பவங்கள். இன்றைய எகிப்தின் ஜனாதிபதி அப்துல் பதா அல்–சிசி கூட தனது பீல்ட் மார்ஷல் பதவியை இராஜினா செய்து விட்டே தேர்தலில் இறங்கினார். அதுதான் உலக நடை முறை.

– எஸ்.எம்.எம்.பஷீர்

தந்தை செல்வாவின் இறுதி அஞ்சலியின் போது நடந்த சம்பவம் நினைவுக்கு வருகிறது. பலரும் 20நிமிடம் 30 நிமிடம் என பேசியபோதும் மட்டுநகர் இராஜதுரை பேசவந்த போது அமிர்தலிங்கம் ஒலிவாங்கியில இனி பேசுபவர்கள் 3 நிமிடங்கள் மட்டும் எடுத்துக் கொள்ளும்படி சொன்னார். சொல்லின் செல்வர் இராஜதுரை 30 வருடங்கள் தந்தை செல்வாவுடன் பயணித்ததை 3 நிமிடங்களில் எப்படி சொல்வேன் என கூறிவிட்டு அமர்ந்துவிட்டார்.

– மாதவன் சஞ்சயன்

என்றைக்கு ஈழ விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் தமிழர்களின் போராட்டம் நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்பதை சரிவர வறையறுக்காத, அடிப்படை அறம் எதுவுமின்றி நெறிகெட்டு பயங்கரவாதப் பாதையில் பாசிச இயக்கத்தின் கட்டுக்குள் சென்றதோ அன்றே ஈழவிடுதலைப் போராட்டம் என்பது அதற்கு மேல் மக்கள் விரோத இயக்கமாக அழிவுப்பாதையில் இறங்கி விட்டதை நாபா உறுதியாக அடையாளம் கண்டார்.

அதனாலேயே அவர் இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்தத்தைச் சந்தர்ப்பமாகக் கொண்டு இலங்கையின் இன முரண்பாட்டுக்கான அரசியற் தீர்வுக்கு மாற்று மூலோபாயங்களைக் கொண்ட அரசியல் இயக்கத்தை முன்னெடுக்க முயன்றார். ஆனால், தமிழ்ச் சமூகமோ வெறித்தனமான சிங்கள இன விரோதப் பிரச்சாரங்களுக்கு எடுபட்டு நிதானமாகச் சிந்திக்கும் திறனை இழந்து போயிருந்தது, இளைஞர்களின் கைகளில் இருந்த ஆயுதங்கள் எப்படியும் தனித் தமிழீழ அரசைப் பெற்றுத் தந்துவிடும் எனத் தமிழ்ப் புத்திஜீவிகள் தமது எல்லா வல்லமைகளையும் பயன்படுத்தி தமிழ்ச் சமூகத்தை ஒரு கள்வெறி மயக்க மகிழ்ச்சி நிலையில் தக்கவைப்பதில் மிகவும் கெட்டித்தனமாக செயற்பட்டுக் கொண்டிருந்தனர். இவற்றால், தோழர் நாபாவின் முயற்சிகளும் முன்னெடுப்பு களும் பயன் விளைவிக்காது போய்விட்டன.

அதன்பின்னரான 20 ஆண்டுகளாக இலங்கைக்கு குறிப்பாக தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளையும் அழிவுகளையும், அவை கடைசியில் முள்ளிவாய்க்கால் அவலங்கள் வரை செல்வதையும் தவிர்க்க முடியாமற் போய் விட்டது. இன்றைக்கு "நான் அவனில்லை" என்று மனச் சாட்சியைப் புதைத்து வைத்து "இரத்தக் கறை படியாதவர் கள்" என அப்பாவி வேஷம் போட்டு பாசாங்கு பண்ணுபவர் கள உண்மையாக நேர்மையாக கொஞ்சமாகவேனும் தாம் கடந்த காலங்களில் சொன்னதை செய்ததை எழுதியதை நினைத்துப் பார்த்தார்களானால் முள்ளிவாய்க்கா லுக்கு தமிழ்ச் சமூகம் இழுபட்டுச் சென்றதில் அவரவர் செய்த பங்களிப்பினைப் புரிந்து கொள்ள முடியும்.

– வரதராஜப்பெருமாள்

# 3 கிலோ கஞ்சாவுடன் குருநகரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் கடற்கரை வீதியில் மூன்று கிலோ கிராம் கஞ்சாவுடன் நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கஞ்சா மொத்த விற்பனையில் ஈடுபட்டதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, 50 ஆயிரம் ரூபா பணத்துடன் வியாபாரி போன்று குறித்த நபரிடம் கஞ்சா வாங்குவதற்காக பொலிஸ் அதிகாரி ஒருவர் அனுப்பப்பட்டுள்ளார்.

இதன்போது குறித்த நபரிடம் அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொண்ட பொலிஸ் அதிகாரி, யாழ் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சந்தேகநபர் கைதுசெய்யப் பட்டார்

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி, சுமார் 3 கிலோகிராம் என தெரியவந்துள்ளது.

யாழில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில், பொலிஸார் யாழில் அனைத்து பிரதேசங்களிலும் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதற்கென அதிரடிப்படையினரின் உதவியுடன் விஷேட குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாள் வெட்டு சந்தேக நபர் கட்டுவனில் கைது

பளை பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை நேற்று அதிகாலை கட்டுவன் கூறைமுனைப் பகுதியில் வைத்து கைது செய்ததாக தெல்லிப்பளை பொலிஸார தெரிவித்தனர்.

குறித்தநபர், அப்பகுதியில் மறைந்திருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் தெல்லிப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.என்.எஸ் கஸ்தூரியாராட்சியின் வழிகாட்டலில் உதவி பொலிஸ் பரிசோதகர் தலைமையில் சென்ற குழுவினர் சந்தேக நபரை கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சர்வதேச தரத்தில் கற்கை கல்வி அமைச்சு திட்டம்

(கொழும்பு)

சர்வதேச தரத்திலான கல்வியை வழங்கும் திட்டமொன்றை கல்வி அமைச்சு முன்னெடுக்கவுள்ளது.

இதற்கென ஆசிரியர்கள், அதிபர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்கவிருப்பதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

பொல்பிதிகம தேசிய பாடசாலையின் தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை அண்மையில் திறந்து வைத்து உரையாற்றிய அமைச்சர், எமது பாடசாலைகளில் கல்வி பயிலும் சுமார் 40 இலட்சம் மாணவர்களில் கல்வியை சர்வதேச தரத்துக்கு உயர்த்தவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.



இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவென க.பொ.த உயர் தரம்,சாதாரண தரம் மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகளில்சிறந்த பெறுபேறுகளைப் பெறும் 10 பாடசாலைகளில் அதிபர்களுக்காக ஆண்டு தோறும் தெரிவு செய்து வெளிநாடுகளில் விசேட பயிற்சியாக வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இப் பயிற்சிக்காக தேவையான நிதியை ஒதுக்கியுள்ளோம். இத்திட்டம் விரைவில் முன்னெடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில், மாகாண சபை உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள் உட்பட பலரும் உரையாற்றினர்.

# அரசியலிலிருந்து ஓய்வுபெறும் சனத்?



எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என பிரதி அமைச்சர் சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எந்தவொரு கட்சியின் சார்பிலும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். சுதந்திரக் கட்சியின் மாத்தறை மாவட்ட தொகுதி அமைப்பாளர் பதவியையும் சனத் ஜயசூரிய இராஜினாமா செய்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலும் பிரதி அமைச்சராக கடமையாற்றிய சனத் ஜயசூரிய, புதிய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திலும் பிரதி அமைச்சராக கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல்கால வன்முறைகளை தடுப்பதற்கு அவதானம் தேவை


## மக்களுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

தேர்தல் காலப்பகுதியில் வன்முறைகளைத் தடுப்பதற்கு வேட்பாளர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என தேர்தல் கண்காணிப்பாளர்கள் கோருகின்றனர்.

எதிர்வரும் நாட்களில் தேர்தல் சட்டங்களுக்கு உட்பட்டு பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.


சட்டம் மற்றும் நீதியை



பாதுகாப்பது தொடர்பில் வேட்பாளர்கள் அவதானம் செலுத்த வேண்டும் என தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு மத்திய நிலையத்தின் தேசிய அமைப்பாளர் ரசாங்க ஹரிச்சந்திர தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல் காலப்பகுதியில் ஏற்படும் மோதல்களை தடுப்பது கட்சி தலைவர்களின் பொறுப்பு என கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவிக்கின்றார்.

# வைரஸ் மென்பொருளால் நிறைகூடுமா கணனி,?



தனது மகளின் மடிகணனிக்கு வைரஸ் கார்ட் ஒன்றைப் போடச் சென்ற 58 வயதுடைய தந்தையொருவர், வைரஸ் கார்டினால் கணனியின் நிறை அதிகரித்து விட்டதாக கூறிச்சென்ற சம்பவமொன்று ஹெம்மாதகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கணனி விற்பனை நிலையமொன்றுக்கு தனது மகளின் மடிகணனிக்கு வைரஸ் கார்ட் ஒன்றைப் போட்டுக்கொள் வதற்காக எடுத்துச் சென்ற மேற்படி தந்தை, தனது தேவை தொடர்பில் கணனி நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்த வேலையை செய்து முடிக்க சுமார் 20 நிமிடங்கள் எடுக்கும் என்று கடைக்காரர் கூறியதை அடுத்து, அதுவரை தான் சந்தைக்கு சென்று வருவதாகக் கூறிச் சென்றவர், மீண்டும் சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் கணனி நிலையத்துக்கு திரும்பியுள்ளார்.

தான் கொடுத்த வேலை செய்தாகிவிட்டதா என கடையில் இருந்த இளைஞனிடம் அந்த தந்தை கேட்டிபோது, "ஓம் அங்கிள், வைரஸ் கார்ட் போட்டாச்சுது என்று கூறியுள்ளார்.

பின்னர், தனது சட்டைப் பைக்குள் இருந்து 1000 ரூபாவினை எடுத்து கடையிலிருந்த இளைஞனிடம் அவர் நீட்டியபோது, "ஐயோ எனக்குப் பணம் வேண்டாம அங்கிள், இந்தக் கணனியை உங்கள் மகள் இங்கேயே கொள்வனவு செய்தார். அதனால், இதற்கு பணம் வேண்டாம்" என்றான்.

"சரி" என்று கூறிய தந்தை, கணினியை கொண்டுசெல்வதற்காக அதனை கையில் எடுத்துக்கொண்டவுடனேயே, "ஐயோ! பிள்ளை, இந்த வைரஸ் கார்டை போட்ட பிறகு, கணனியின் நிறை கூடிப்போச்சே" என்று வருந்திக்கொண்டார்.

# நல்லாட்சி அரசும் விடுகின்றது பிழை

## என்கிறது பவ்ரல்

கடந்த அரசாங்கம் விட்ட பிழைகளை நல்லாட்சி அரசாங்கமும் விடுகின்றது என பவ்ரல் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

தேர்தல் காலத்தில் கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் செய்த அதே பிழைகளை, நல்லாட்சி நடாத்தும் மைத்திரிபால அரசாங்கமும் செய்கின்றது என பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் புதிய நியமனங்கள் மற்றும் இடமாற்றங்களை இந்த அரசாங்கமும் செய்துள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மருந்துப் பொருள் அதிகார சபை, தொழில் பயிற்சி அதிகாரசபை, இளைஞர் சேவை மன்றம், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் உள்ளிட்ட பல துறைகளில் நியமனங்கள் வழங்கப்படுவதுடன், நியமனங்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிடம் நாம் முறைப்பாடு செய்யத் தீர்மானித்துள்ளோம் என ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

# மக்களுக்குச் சேவையாற்ற எம்.பி.பதவி அவசியமில்லை

## கோத்தா கூறுகிறார்

மக்களுக்குச் சேவை செய்ய நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவி அத்தியாவசியம். இல்லை எனவும் தான் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

பொதுத் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ஷ போட்டியிடவுள்ளதாக வெளியான தகவல் குறித்து ஊடகமொன்று வினவிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமெரிக்க பிரஜாவுரிமை உள்ளமையால் தான் தேர்தலில் போட்டியிடவில்லையா என இதன்போது எமது செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

அதனால் எந்த சிக்கலும் இல்லை என கூறிய கோட்டாபய, தன்து அமெரிக்க பிரஜாவுரிமையை நீக்கத் தேவையான ஆவணங்களை தற்போது தூதுவராலயத்தில் கையளித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை பஷில் ராஜபக்ஷ பொதுத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை எனவும், சமல் ராஜபக்ஷ போட்டியிடப் போவதில்லை எனவும் தெரிய வந்துள்ளது

# போக்குவரத்து நெருக்கடியில் வன்னேரிக்குளம் மாணவர்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகா வித்தியாலய மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.


கிளிநொச்சி மேற்கின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள இக்கிராமம் 1953ஆம் ஆண்டு உருவாக்கப் பட்டது.

இக்கிராமத்தில் 1954ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்துக்கு போக்குவரத்து பெரும் நெருக்கடியாகவுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து வன்னேரிக்குளம் மருத்துவமனை வழியாக முழங்காவில் வரை பேருந்துகள் பயணிக்கின்றன. வன்னேரிக்குளம் மருத்துவமனையிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள பாடசாலைக்கு பேருந்துகள் பயணிப்பதில்லை.

இதன் காரணமாக மாணவர்களும் ஆசிரியர்களும் நடந்தே செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது. இந்நிலையில் வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் வரை பேருந்து வழித்தடத்தை வழங்குமாறு வன்னேரிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கமும் பெற்றோர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

49. 
இப்படத்தில் காணப்படுபவரின் பெயர் என்ன?
1) ஆனந்த சமரக்கோன்
2) அநாகரிக தர்மபால
3) ஸேர்டி.ஜயதிலக
4) டீ.எஸ்.சேனநாயக்க

50. 
அருகிலே தரப்பட்ட தையல் முறை எதற்குப் பயன்படுகிறது?
1) பொருத்துகளை இணைக்க
2) தடித்த துணிகளை தைக்க
3) மடிப்புக்கள் குலையாமல் இருக்க
4) அலங்கார வேலைகளுக்கு

51. 
அருகிலே தரப்பட்ட குறியீடு குறிப்பது?
1) விமான நிலையம்
2) விமானப்படை
3) உல்லாச பயணத்துறை
4) போக்குவரத்து

52. 
அருகிலே தரப்பட்ட இரண்டு வித்துக்களும் எவ்வாறு பரம்பலடைகின்றன?
1) நீர், காற்று
2) காற்று, காற்று
3) விலங்கு, நீர்
4) விலங்கு, விலங்கு

53. 
உருவில் உள்ள அலகு எதற்குரியது?
1) கோழி
2) நாரை
3) தாரா
4) கொக்கு

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01) 01. பூ, காய்கறி, பழங்கள், கீரைவகை　02. பூச்செடிகள், காய்கறிகள்
03.பூச்செடிகளை　04. சந்தை　05. பெரிய - சிறிய　06. தேவை + இல்லை
07. பணச்செலவு குயையும்　08. வீட்டுத்தோட்டம்　(02) 09. Tree
(03) 10. கப்புட்டா　11. வத்துற　(04) 12. ல　13. ள்　14. ண
15. ர　16. ல　(05) 17. பெய்யும்　18. நடைபெற்றது　19. போவோம்
(06)20. சந்தை　21. தொலைக்காட்சி　(07) 22. அந்தூரியம்　23. பக்றிரியா　24. 3
25. புத்தளம்　26. மஞ்சள்　27. இலங்கை　28. ஆனந்தசமரக்கோன்
30. மேதினம்　31. ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 4ஆம் திகதி　32. உருளுதல்
(08)33. 106　34. நிறந்திட்டுக　35. 81　36. திங்கட்கிழமை　37.6cm
38. 12　39. 2　40. 30　41. 9　42. 28
43. மீன் முள்ளுத்தையல்　44. 11 பேர்　45. ஏழு　46. எட்டு　47. நாகமரம்
(09) 48 - 50 வரை கட்டுரை　51. மப்பும் மந்தாரமுமாய்　52. காற்றுப்பலமாக வீசியதால்　53. தூசுகள், கடதாசிகள், கூரைதகடுகள்　54. முறிந்தன　55. ஓ ஓ என்ற சத்தத்துடன்　(10) 56. ஆகாயம்
57. விருட்சம் / தரு　58. வளி　(11) 59. மழை　60.பமி
(12) 61. சந்தோசம்　62. விளையாட்டு　63. காரணம்　64. வானவில்　65. பயில்வோர்
(13) 66. பனை பால் குடிக்கும்　67. நாளை பாடசாலை விடுமுறை　(14) 68. மிஞ்சினால்
69. சிலையில்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015　பகுதி - II　1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க
(01) பின்வரும் இரு பாடல்களையும் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக


* நாளைய உலகை ஆளப்போகிற நாட்டின் தலைவர்களே வருங்காலம் உங்களை நம்பியே உள்ளது வளரும் பிள்ளைகளே
* நாடும் மொழியும் நமக்கிரு நாட்டின் செல்வங்களே பெற்ற தாயினைப் போலவே நாட்டையும் மதியுங்கள் தம்பி தங்கைகளே

01. நாளைய உலகை ஆளுகின்ற தலைவர்கள் யார்?
..............................................................
02. நமது நாட்டின் இரு செல்வங்களும் எவை?
..............................................................
03. வருங்காலம் என்பதன் ஒத்தசொல் யாது?
..............................................................
04. இப்பாடலில் வந்துள்ள உவமைத்தொடரை எழுதுக?
..............................................................
05. காடு என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக
..............................................................
06. முன்னிலை பன்மை எதிர்கால வினைச்சொல்லினை எழுதுக
..............................................................

(02) அ) கீழே தரப்பட்டுள்ளவற்றிக்கு அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக
(யானைகள், போனான், வந்தீர், நீ, போனேன், கிளி)
07. உயர்திணை படர்க்கை ஒருமை வினைச்சொல் ..............................
08. உயர்திணை முன்னிலை பன்மை வினைச்சொல் ..............................
09. அஃறிணை படர்க்கை ஒருமை பெயர்ச்சொல் ..............................
ஆ) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக
10. துணியினால் தலையிலே அழகாகக் கட்டப்படுவது ..............................
11. செங்கற்கள் சுடப்படும் இடம் ..............................
12. பலகலைகளிலும் உயர்கல்வி கற்குமிடம் ..............................
(03) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக
13. I Will give you a pen ..............................
14. please come in ..............................
15. This is my mother ..............................
(04) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக
16. தயவு செய்து வெளியே போகவும் ..............................

**(05) ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப்பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக**

17.  ............................

18.  ............................

**(06) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக**

19. உள்ளே வாருங்கள் ..............................

**(07) பின்வரும் பழமொழிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக**

20. காவோலை விழ .............................. சிரிக்கும்

21. துள்ளுகிற மாடு .............................. சுமக்கும்

**(08) பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக**

22. நான் தம்பி தங்கை எல்லோரும் பாடசாலைக்குப் புறப்பட்டோம்

23. உனது பெயர் என்ன

**(09) சரியாக எழுத்துக்கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ் கோடிடுக**

24. பயிற்ச்சி, பயிற்சி, பயிர்சி, பயிர்ச்சி

25. பால்செம்பு, பாற்செம்பு, பாற்சொம்பு, பாற்ச்செம்பு

**(10) 26 - 37 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக**

26. விலங்குகளால் பரவிப்பெருகும் வித்து வகை எது?
1) புலிநகம், ஆடையொட்டி 2) வேங்கை, புலிநகம்
3) கடல்மாங்காய், ஆடையொட்டி 4) சீதேவியார் செங்கழுநீர், இறப்பர்

27. நிறை உணவு எனக்கொள்ளக் கூடியது
1) ஒலிவ்ஒயில் 2) சோறு 3) பால் 4) கீரைவகைகள்

28. நீண்ட செவிகள் மூலம் சிறிய சத்தத்தையும் கேட்டு எதிரியிடம் இருந்து தப்பி ஓடும் பிராணி
1) அணில் 2) முயல் 3) பனை 4) பாம்பு

29. வொலிபோல் விளையாட்டுக்கு அவசியமில்லாத பொருள் எது?
1) பந்து 2) வலை 3) வலைகட்டும் தூண்கள் 4) மட்டை

30. ஊதா நிறத்தைப் பெறக்கூடிய நிறக்கலவை
1) நீலம் + சிவப்பு 2) நீலம் + மஞ்சள் 3) பச்சை + மஞ்சள் 4) சிவப்பு + மஞ்சள்

31. இலைகள் மூலம் இனப்பெருக்கம் அடையும் தாவரம் எது?
1) காட்டு அல்லி 2) வில்லை 3) மரவள்ளி 4) பல்லி

32. குட்டி ஈன்று பால் கொடுக்காத பிராணி எது?
1) மனிதன் 2) திமிங்கிலம் 3) வௌவால் 4) பல்லி



33. அரச இலட்சினையில் உள்ள சிங்கம் குறித்து நிற்பது
1) வீரம் 2) தூய்மை 3) சௌபாக்கியம் 4) நீதி

34. துவிச்சக்கரவண்டியின் விளக்கிற்கு மின்சக்தியை வழங்கும் உபகரணம் எது?
1) மின்குமிழ் 2) தைனமோ 3) மின்கலம் 4) மின்கம்பி

35. பெண்களின் மேனி அழகை மெருகூட்ட அழகு சாதனப் பொருட்களில் சேர்க்கப்படும் தாவரச்சாறு எது?
1) இஞ்சி 2) கற்றாளை
3) கீரைச்சாறு 4) முந்திரிகைக் கோது

36. பின்வரும் பொருட்களில் சூரிய வெப்பத்தில் மிக விரைவாக சூடாகும் பொருள் எது?
1) மண்கட்டி 2) இறப்பர்துண்டு
3) இரும்புத்துண்டு 4) கருங்கல்

37. கிளைகளில் வேர்கள் வளரக்கூடிய தாவரவகை எது;
1) ஆலமரம் 2) அரசமரம் 3) நாகமரம் 4) வெள்ளரசமரம்

**(11) 38 - 43 வரையான ஒவ்வொரு வேலையையும் பெற்றுக்கொள்வதற்காக நீங்கள் போகவேண்டிய இடம் எது என்பதைக் கண்டு அதன் ஆங்கில எழுத்தை எழுதுக**

A - கிராம சேவகர் அலுவலகம்
B - இலங்கை மின்சார சபை
C - பிரதேசசபை அலுவலகம்
D - அஞ்சல் அலுவலகம்
E - சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்
F - நீர் வழங்கல் வடிகால் சபை அலுவலகம்

38. முத்திரை வாங்குவதற்கு செல்ல வேண்டிய இடம் ..............................

39. நன்நடத்தைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள செல்ல வேண்டிய இடம் ..............................

40. குழந்தைகளுக்கு போலியோ ஊசியை ஏற்றல் ..............................

41. வீட்டுக்கு மின்சார இணைப்பைப் பெற செல்ல வேண்டியது ..............................

42. இல்லத்துக்கு குழாய் நீர் வசதியைப் பெற்றுக்கொள்ள ..............................

43. சைக்கிளுக்குஅனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள ..............................

44. பண்டையகாலத்தில் தங்கத்தின் நிறையை அளவிடப் பயன்படுத்தி தாவர வித்து எது?
1) மஞ்சாடி வித்து 2) குன்றிமணி
3) கடுவித்து 4) சோளம் வித்து

45. வளர்ப்பு முயல்களை தூக்கும் போது பிடிப்பது முயலின்
1) கால்களை 2) வெள்ளை
3) கழுத்துப்பகுதியை 4) வயிற்றுப்பகுதியை

46. எந்நிற பழவகைகள் காய்கறிகளில் விற்றமின்கள் அதிகளவுகளில் காணப்படுகின்றன
1) மஞ்சள் 2) வெள்ளை 3) நாவல் 4) பச்சை

47. 
அருகிலே தரப்பட்ட சமிக்ஞை எதனை வெளிக்காட்டுகிறது?
1) கொஞ்சம் தாமதியுங்கள்
2) வலப்பக்கம் திரும்பல்
3) நான் வட்டப்பாதையில் செல்லவுள்ளேன்
4) முன்னால் வலது பக்க வளைவு

48. 
உருவில் காணப்படும் பறவையின் பெயர் யாது?
1) புறா 2) ஆந்தை
3) மீன்கொத்தி 4) தேன்சிட்டு

# ஜனாதிபதியின் நிலைப்பாடுகளால் குழப்பத்துக்குள்ளாகியுள்ள மகிந்த

## அனுராதபுர கூட்டமும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேடையேறவிருந்த அனுராதபுர கூட்டம் திடீரெனப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ தனது அரசியல் மறுபிரவேசத்தை அறிவித்த பின்னர், அனுராதபுரத்தில் நாளை நடக்கவிருந்த பாரிய பேரணியில் கலந்து கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

ஏற்கனவே அவருக்கு ஆதரவாக நடாத்தப்பட்ட கூட்டங்களில் அவர் மேடை ஏறாத நிலையில், அனுராதபுரவில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் அவர் முதன் முதலாக மேடையேறுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு மகிந்த ராஜபகஷ தரப்பு பிரமாண்டமான ஏற்பாடுகளைச் செய்ததுடன், இலட்சக்கணக்கான ஆதரவாளர்களையும் ஒன்று திரட்டுவதில் ஈடுபட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுமதி அளிக்கப்பட்ட பின்னர், ஜனாதிபதி மைத்திரி

பால சிறிசேன வையும் மகிந்த ராஜபக்ஷ வையும் இந்தக் கூட்டத்தில் ஒரே மேடையில் தோன்றச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான இந்த கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்க மறுப்புத் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையிலேயே நாளை நடக்கவிருந்த கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

இதனை உறுதிப்படுத்தியுள்ள மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் ரொகான் வெலிவிட்ட, ஜனாதிபதிக்கு குறிப்பிட்ட நாளில் ஏற்கனவே திடடமிடப்பட்ட நிகழ்ச்சிகள் இருப்பதாலேயே இந்தக் கூட்டம் பிற்போடப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு பொருத்தமான நாளில் இந்தக் கூட்டம் நடாத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஜனாதிபதி செயலகம் இந்தத் தகவலை முற்றாக நிராகரித்துள்ளது.

அனுராதபுரத்தில் நடைபெறவிருந்த கூட்டத்தில் பங்கேற்கும் திட்டம் ஏதும் மைத்திரிபால சிறிசேனவுக்கு இருக்கவில்லை என்றும் ஜனாதிபதி செயலகம் கூறியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு போடடியிட வாய்ப்பளித்தாலும், அவருக்கு ஆதரவாகப் பரப்புரை செயவதில்லை என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருப்பதாக கூறப்படுகிறது.

அதேவேளை, மைத்திரிபால சிறிசேனவின் நிலைப்பாடுகள் மகிந்த ராஜபக்ஷ தரப்பை குழப்பத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

இதனால் தான் அனுராதபுர கூட்டம் இடைநிறுத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உண்மையிலேயே இடமளிக்கப்படுமா என்ற சந்தேகம் தோன்றியுள்ளது.

சிலவேளைகளில் அவ்வாறு போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டால், மாற்று அணியாகப் போட்டியிடும் ஏற்பாடுகளை மகிந்த தரப்பு மேற்கொண்டு வருகிறது.

இதற்காக வேட்பாளர் பட்டியலும் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையிலேயே, எதிர்வரும் 13ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் நிறைவடையும் வரை நிச்சயமாக எதையும் கூற முடியாது என்பதாலேயே, மகிந்த ராஜபக்ஷவின் அனுராதபுர கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வரும் 13ஆம் திகதிக்குப் பின்னர் இந்தக் கூட்டம் நடத்தப்படும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் நேற்று ஆரம்பமானது. இதனையொட்டி யாழ். செயலகப் பகுதியில் கலகமடக்கும் வாகனம் சகிதம் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளதைக் காணலாம். (படம் இ. இராஜகுமார்)

# ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு வாக்கைத் தாருங்கள்

## பொதுபலசேனா வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டிலுள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு வாக்கை தமக்கு வழங்குமாறு பொதுபல சேனா அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. பொது பலசேனா அமைப்பின் மேற்பார்வையில் தேர்தலில் போட்டியிடும் பொது ஜன பெரமுன கட்சிக்கு இதனை வழங்குமாறும் அவ்வமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இனத்தின் பலத்தைக் காக்கும் நோக்கில் தேர்தலில் இறங்கியுள்ள தனது கட்சிக்காக இந்த வாக்கை வழங்கி நாடாளுமன்றத்துக்கு தமது பிரதிநிதிகளை அனுப்ப ஒத்துழைப்பு வழங்குமாறும் அவ்வமைப்பு கேட்டுள்ளது.

# டிரான் அலஸ் கைது எதிர்வரும் 10 வரை இல்லை

(கொழும்பு)

ராடா நிதி மோசடி தொடர்புடைய வ்ழக்கு விசாரணை உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருவதால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸை எதிர்வரும் 10ஆம் திகதி வரை கைது செய்யமாட்டோம் என்று சட்டமா அதிபர், நேற்று தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸை நேற்று வரையில் கைதுசெய்யமாட்டோம் என்று சட்டமா அதிபர், ஏற்கனவே தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# முதியோருக்கு கொடுப்பனவுகள்

வலிகாமம் கிழக்கில் சமூக சேவைத் திணைக்களத்தால் 70 வயதைக் கடந்த முதியோருக்காக வழங்கப்பட்டுவரும் மாதாந்த உதவிப் பணம் 2000 ரூபா தற்சமயம் அந்தப்பகுதி தபால் அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 3 மாதங்களாக இந்த உதவிக் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் தற்சமயம் மே மாதத்துக்கான கொடுப்பனவு தமக்கு கிடைத்துள்ளதாக அச்சுவேலி மேற்கு முதியவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு வருமான வழியும் இல்லாத நாம் அரசின் இந்த உதவிக் கொடுப்பனவுகளையே அவசிய செலவுக்காக நம்பியுள்ளோம். இவை உரிய காலத்தில் கிடைக்கவழிகள் கிட்டுமாயின் அது எமக்கு பேருதவியாக அமையுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (168)

# றமழான் சிந்தனை




**நோன்பின் கடைசி பத்து நாட்கள் வந்துவிட்டால் நபி(ஸல்) அவர்கள் இரவில் விழித்திருப்பார்கள். தன் குடும்பத்தாரையும் விழித்திருக்கச் செய்வார்கள். (புகாரி - 2026)**

**ஸஹர் முடிவு : அதிகாலை 4.20**
**நோன்பு திறக்கும் நேரம் : மாலை 6.37**

(105)

# இன்புளுவன்சா பற்றி அறிவோம்...




இன்று உலகளாவிய ரீதியில் மட்டுமன்றி எமது நாட்டிலும் ஏன் எமது பிரதேசங்களிலும் கூட இச் சுவாசத்தொற்று நோயான இன்புளுவன்சாவின் தாக்கம் உள்ளது. நாம் இச சுவாசத் தொற்றுநோயில் இருந்து பாதுகாப்பு பெறவேண்டுமாயின் இந்நோய் தொடாபாக அறிந்து வைத்திருத்தல் அவசியம். எனவே இந் நோய் தொடர்பான தகவல்கள் தரப்படுகின்றன.

**இன்புளுவன்சா என்றால் என்ன...**

இது இன்புளுவன்சா வைரஸ் கிருமிகளால் ஏற்படுத்தப்படும் ஓர் சுவாசத் தொற்றுநோயாகும். இன்புளுவன்சா வைரஸ் இன்புளுவென்சா A,B,C என பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படும். அதில் இன்புளுவன்சா Ad ஒரு உப பிரிவு H1N1 ஆகும். இந்த H1N1இல் பல துணைப்பிரிவுகள் தோன்றியுவண்ணம் உள்ளன. இவற்றுள் H1N1 அதிக ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இதுவரை அடையாளங்காணப்பட்டு அறிவிக்கப்பட்ட நோயாளிகளில் இன்புளுவென்சா ANa அடையாளங் காணப்பட்டுள்ளது. அவை H1N1 தான் என முடிவாகத் தெரியவரவில்லை. மேலும் இதுவரை யாழ்ப்பாணத்தில் இன்புளுவென்சாத் தொற்றால் இறப்பேதும் ஏற்படவில்லை என்பது ஆறுதல் தரும் செய்தியாகும்.

**இன்புளுவென்சா வைரஸ் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு எவ்வாறு தொற்றடைகின்றது......**

இன்புளுவென்சா வைரஸ் கிருமியால் பாதிக்கப்பட்ட தடிமன் நோயாளி இருமும் போதும், தும்மும் போதும் அல்லது மூக்கிலிருந்து வெளிவரும் சளிபோன்ற திரவம் இன்னொருவருக்கு காற்று மூலமோ அல்லது தொற்றடைந்த மேற்பரப்பைத் தொடுவதன் மூலமோ இலகுவாகத் தொற்றடைகின்றது.

**இன்புளுவென்சா நோய்க்குரிய அறிகுறிகள்.........**

காய்ச்சல், தலையிடி, தசை நோவு அல்லது உடல் நோவு, தொண்டை நோவு அல்லது தொண்டை வலி, இருமல், மூக்கிலிருந்து நீர் வடிதல், வாந்தியும்,வயிற்றுப்போக்கும்.(சில வேளைகளில்)

(நோய்த் தொற்று இருக்கும் காலத்தில் மூச்சு எடுப்பதில் சிரமம், கடுமையான நோய்நிலமை காணப்படுமாயின் உடனடியாக மருத்துவ சிகிச்சையை நாடவும்)

**H1N1 இன்புளுவன்சா வைரஸ் தொற்றால் பாரதூரமான விளைவுகள் ஏற்படக்கூடிய அதிக ஆபத்துள்ளோர்.:.**

இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணித் தாய்பார்கள், பாலூட்டும் தாய்மார்கள், 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், நாப்பட்ட சுவாச நோய், இதய நோய், சலரோகம், புற்றுநோய், ஆஸதுமா சிறுநீரக நோய், நரம்பு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், குருதிச்சோகை உள்ளோர்.

(மேற் குறிப்பிட்டவர்கள் நோயறிகுறிகள் தென்படின் உடனடியாக அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலையை நாடுதல் வேண்டும்)

**இன்புளுவன்சா நோயிலிருந்து பாதுகாத்துக கொள்வதற்கு நாம் செய்ய வேண்டியவை.....**

தடிமன் நோய் அறிகுறி இருப்போரிடமிருந்து தள்ளியிருங்கள். தேவையற்ற விதத்தில் அடிக்கடி மூக்கு, வாய் போன்றவற்றைத் தொடாதீர்கள். எப்பொழுதும் அடிக்கடி சவர்க்காரம் பாவித்து கைகளைச் சுத்தமாக்கிக் கொள்ளுங்கள். இருமும் போதும், தும்மும் போதும் டிசுக் கடதாசியினைப் பாவித்துமூக்கையும் வாயையும் மூடிக் கொள்ளுங்கள். (பாவித்த டிசுக் கடதாசியினை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தல் வேண்டும். எரித்தல் சிறந்தது) அல்லது கைக் குட்டையைப் பாவித்து மூக்கையும், வாயையும் மூடிக் கொள்ளுங்கள். (இவ் பாவித்த கைக்குட்டையினை அடிக்கடி நீரினால் கழுவி சுத்தப்படுத்தி வெய்யிலில் உலர்த்துங்கள்) அல்லது கைக் குட்டையோ, டிசுக் கடதாசியோ கிடைக்காத சந்தர்ப்பத்தில் இருமும் போதும், தும்மும் போதும் வாயை மூடிக் கொள்வதற்கு எமது உள்ளங் கைகளைப் பயன்படுத்தாமல், முழங்கையின் உட்புறத்தைப் பயன்படுத்துங்கள்.

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**யாழ்ப்பாணம்.**

# இந்திய இராணுவ நிலைகள் மீது பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல்



காஷ்மீர் எல்லையையொட்டி இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே எல்லைக்கட்டுப்பாட்டு கோடு மற்றும் சர்வதேச எல்லைப் பகுதிகளில் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உளளது. எல்லையில் அமைதி நிலவும் போது எல்லாம் பாகிஸ்தான் இராணுவம் போர் ஒப்பந்தத்தை மீறி அத்துமீறல்களில் ஈடுபட்டு பதட்டத்தை ஏற்படுத்துவதை வழகமாக கொண்டு உள்ளது.

கடந்த யூன் மாதம் 22 ஆம் திகதியும் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் ஜம்மு மாவட்டத்தில உள்ள ஆர்.எஸ். புரா செக்டாரில இரண்டு இந்திய நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடாத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் இராணுவம் இந்திய எல்லையில் நேற்று முன்தினம் அத்துமீறி தாக்குதல் நடத்தி உள்ளது. வடக்கு காஷ்மீரில் எல்லை கட்டுப்பாட்டு கோடு அருகே அர்னியா செக்டரில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் பாகிஸ்தான் இராணுவம் 6 இந்திய இராணுவ நிலைகளை குறிவைத்து கடும் துப்பாக்கி சூடு நடாத்தியது.

துப்பாக்கியுடன் சிறிய வகை மோட்டார் குண்டுகளை வீசியும் தாக்குதல் நடாத்தியுள்ளனர். இந்திய இராணுவ நிலையை குறிவைத்து சுமார் 25 முதல் 30 முறை துப்பாக்கியால் சுட்டனர். இதற்கு இந்திய இராணுவ வீரர்களும் பதில் தாக்குதலில் ஈடுபட்டனர்.

# நைஜீரியாவில் இரண்டு இடங்களில் போகோஹறம் தீவிரவாதிகள் தாக்குதல்

நைஜீரியாவின் ஜொஸ் நகரில் நேற்று முன்தினம் இரண்டு வெவ்வேறு குண்டுத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

முதல் தாக்குதல் உணவு விடுதி ஒன்றைக் குறி வைத்தும், இரண்டாம் தாக்குதல் முஸ்லிம் மத குருமார் காணப்பட்ட பகுதியைக குறிவைத்தும் நடாத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் இந்த குண்டுத்தாக்குதல்களுக்கு போகோஹறம் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

இதேவேளை இந்த தாக்குதல்களில் உயிரிழந்தவர்கள் மற்றும் சேதவிபரங்கள் தொடர்பில் இதுவரை எந்த தகவல்களும் வெளியிடப்படவில்லை. மேலும் முஸ்லிம் மதகுருமார் காணப்பட்ட பகுதியில் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட வேளை அங்கு சமய அறிவுரைகள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றுக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் குண்டுத்தாக்குதலைத் தொடர்ந்து அங்கு துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டதாக நேரில் கண்டவர்கள் சாட்சியம் வழங்கியுள்ளனர். இந்நிலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்பில் உத்தியோகபூர்வ தகவல்களை நைஜீரிய அரசு வெளியிடாத அதேவேளை 16 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என சர்வதேச ஊடகங்கள் சாட்சியங்களின் கருத்தை வைத்து செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் பேருந்து விபத்து 11 பேர் பலி; 17 பேர் காயம்

(பீஜிங்)

சீனாவின் வடகிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 11 பேர் உயிரிழந்ததுடன், 17 பேர் காயமடைந்துள்ளனர்.

தென்கொரிய பிரஜைகள் 10 பேரும் சீனப் பிரஜையான பேருந்து சாரதியும் விபத்தில் உயிரிழந்துள்ளனர். விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் 28 பேர் பேருந்தில் பயணித்துள்ளதுடன், விபத்தில் காயமடைந்த எட்டு தென்கொரிய பிரஜைகளும் கவலைக்கிடமான நிலையிலுள்ளனர்.

பஸ் விபத்துக்குள்ளாகி பாலமொன்றிலிருந்து கீழே விழும் காணொளியை போக்குவரத்து பொலிஸார் வெளியிட்டுள்ளனர். இதேவேளை, விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதாக சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சீன அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

# பிலிப்பைன்ஸிலும் மெர்ஸ் வைரஸ் இருவருக்கு அறிகுறி கண்டுபிடிப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸில் இருவர் மெர்ஸ் தொற்றுநோய்த் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளதை அந்நாட்டு சுகாதாரத்துறை உறுதிப்படுத்தியுள்ளது. கடந்த மாதம் துபாயிலிருந்து மணிலாவிற்கு திரும்பி இருந்த நபர் ஒருவருக்கு மெர்ஸ் நோய்த் தாக்கம் கண்டறியப்பட்டிருந்த நிலையில் அவர் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை பிலிப்பைன்ஸில் இன்னும் ஒருவருக்கும் மெர்ஸ் நோய் அறிகுறி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலையில் இவர்கள் இருவரையும் தீவிர கண்காணிப்பில் வைத்து சிகிச்சை வழங்கி வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.




இதனால் தற்போது பிலிப்பைன்ஸில் மெர்ஸ் தீவிரமாக பரவி வரும் அபாயம் காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளதால் மக்களை விழிப்புடன் இருக்குமாறும் மெர்ஸ் நோய் அறிகுறி தென்பட்டால் உடனடியாக பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் பிலிப்பைன்ஸ் அரசு மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

மேலும் தென்கொரியாவில் பரவலாக பரவி வரும் மெர்ஸ் நோய்க்கு உட்பட்டு இதுவரை 27 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# பிரதமர் நரேந்திரமோடி வெளிநாட்டு சுற்றுப்பயணம்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அதிகாரபூர்வ வெளிநாட்டு பயணங்களின் அடுத்தகட்ட பயணமாக உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான், துர்க்மெனிஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய 5 மத்திய ஆசிய நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இந்த நாடுகள் அனைத்துமே இந்தியாவின பாதுகாப்பு பிராந்திய வட்டத்துடன் தொடர்பு கொண்டவை ஆகும்.

ஒவ்வொரு நாட்டிலும் பிரதமர் 24 மணி நேரத்துக்கும் குறைவாகவே தங்கும் வகையில் அவருடைய பயண திட்டம் அமைக்கப்பட்டு இருக்கிறது. டெல்லியில் இருந்து நேற்று புறப்பட்டு உஸ்பெகிஸ்தான் நாட்டுக்கு சென்ற பிரதமர் மோடி நாளையும் அங்கு இருப்பார். அதன்பின்பு அவர் 2 நாள் பயணமாக கஜகஸதான செல்கிறார். அங்கு 7 மற்றும் 8ஆம் திகதிகளில் தங்கியிருப்பார்.

தனது பயணத்தின் தொடர்ச்சியாக அங்கிருந்து ரஷ்யாவுக்கு செல்லும் அவர் 9ஆம் திகதி உபா நகரில் நடைபெற இருக்கும் பிரிக்ஸ் மற்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்கிறார். அப்போது பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் அவர் சந்தித்து பேசுகிறார். பிரதமர் மோடி கடந்த ஓராண்டில் அமெரிக்கா, சீனா, பிரேசில், பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்ரேலியா, ஜப்பான், தென் கொரியா உள்ளிட்ட உலகின் 18 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் அப்போது அந்த நாடுகளுடன் பல முக்கிய ஒப்பந்தங்களிலும் அவர் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குழந்தையின் பாதுகாப்பு விடயம் தந்தையின் அனுமதி தேவையில்லை

– உச்ச நீதிமன்றம் தீர்ப்பு –

(இந்தியா)

திருமணமாகாத தாய்க்குப் பிறந்த குழந்தையின் பாதுகாவலர் விஷயத்தில் தந்தையின் அனுமதியைப் பெற வேண்டிய அவசியமில்லை என்று உச்ச நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பை வழங்கியுள்ளது. திருமணமாகாத அரசு பெண் ஊழியர் ஒருவர் தனது குழந்தையின் பாதுகாவலராக இருப்பது குறித்து தொடர்புபட்ட வழக்கில், உச்ச நீதிமன்ற நீதிபதி விக்ரமஜித் சென் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இதற்கு மாறாக கீழ் நீதிமன்றமோ உயர் நீதிமன்றங்களோ இதுபோன்ற தீர்ப்பை குழந்தையின் நலனைக் கருத்தில் கொள்ளாமல் அறிவித்திருந் தால் அவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய எல்லைக்குள் நுழைந்த மர்மப்படகு கடலோர காவற்படையால் மடக்கிப்பிடிப்பு



இந்திய கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்த மர்மப் படகை கடலோர காவற்படையினர் மடக்கிப் பிடித்து விசாரணை நடத்தியுள்ளனர். கேரள மாநிலம் ஆழப்புழா கடல் பகுதியில் 52 கடல் மைல் தூரத்தில் ஒரு மர்மப்படகு நேற்றுமுன்தினம் அதிகாலை வந்தது கண்டறியப்பட்டது.

இதையடுத்து கடலோர காவற்படையினர் உஷார்படுத்தப்பட்டு தீவிர சோதனையில் ஈடுபட்டனர். பின்னர் அந்த மர்மப் படகை இந்திய கடலோர காவற படையினர் மடக்கிப் பிடித்துள்ளனர். மீன்பிடிப்படகு போல இருந்த அந்தப் படகில் 12 ஈரானியர்கள் இருந்தனர். அந்தப் படகில் இருந்து பாகிஸ்தான் நாட்டின் அடையாள அட்டை ஒன்றும் செய்மதி தொலைபேசிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பிடிபட்ட அனைவரும் திருவனந்தபுரத்தில் உள்ள விழிஞ்சம் துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். விசாரணையில் அந்த படகு கடந்த மே மாதம், 25ஆம் திகதி ஈரானில் உள்ள கலத் என்ற இடத்தில் இருந்து புறப்பட்டது தெரிய வந்தது. ஈரான் நாட்டினர் இந்திய கடல் எல்லைப்பகுதியில் ஊடுருவியதற்கு காரணம் என்ன என்பது குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தகைமைக்கு ஏற்ப தொழில் வாய்ப்பு எங்களுக்கு வழங்காதது ஏன்?

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

பட்டதாரிகள் சங்கத்தினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் நேற்று முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

அரச சேவைகளில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளுக்கு அவர்களின் தகைமைகளுக்கு ஏற்ப தொழில்களை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பட்டதாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் சந்தன சூரியாரச்சி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த முறைப்பாட்டில் பிரதிவாதிகளாக மேல்மாகாண சபை செயலாளர், மாகாண சுகாதார சேவை பணிப்பாளர், அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சுமார் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் வரையிலான பட்டதாரிகள் அரச சேவைகளில் ஈடுபட்டுள்ளனர். கடந்த அரசாங்கமும் நடப்பு அரசாங்கமும் பட்டதாரிகளை அவர்களது தகைமைகளுக்கு ஏற்ப நடத்தவில்லை.

பட்டதாரிகள் இன்று சாதாரண தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு அலுவலக உதவி தொழிலே வழங்கப்பட்டுள்ளது தவிர அவர்களது கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப அரச நிர்வாக நிலைகளில் தொழில்வாய்ப்பு வழங்கப்படவில்லை.

2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி அரச நிர்வாக அமைச்சினால் ஒரு சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டிருந்தது. அரச நிர்வாகப் பணிகளில் பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்படும்போது அவர்கள் அலுவலக உதவியாளர்களாக நியமிக்கப்பட மாட்டார்கள் என்றும் அவர்களது கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப தொழில் வழங்கப்படும் எனவும் அதில் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

எனினும் அரச நிறுவனங்களிலுள்ள உயர் அதிகாரிகள் பட்டதாரிகளை இன்று அவ்வாறு நடத்தவில்லை.

எனவே தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளுக்கான சங்கம் என்ற வகையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளோம்.

இதன் ஊடாக அரச சேவைகளில் பணிபுரிந்துவரும் பட்டதாரிகள் கீழ்மட்ட ஊழியர்களைப் போல நடத்துவது தடுக்கப்பட வேண்டும், பட்டதாரிகளை வரவேற்பு அளிக்கும் நிலை தொழில்களில் ஈடுபடுத்தப்படுவது தொடர்பாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தொழிற்சங்கம் என்ற வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் என்றார்.

# கஞ்சா கடத்தல் கடலில் பிடிபட்டது

தமிழகத்தின் இராமேஸ்வரம் மீனவர்களால் இலங்கைக்கு கடத்தப்பட்ட கஞ்சா பொதிகளை தலைமன்னார் கடற்படையினர் நேற்று மீட்டனர் அத்துடன் அவற்றை வைத்திருந்த நான்கு தமிழகம் மீனவர்களையும் தலைமன்னார் கடலில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை போதைப் பொருள் கடத்தப்படவிருப்பதாக கடற்படையினருக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்து தலைமைன்னார் பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து நடத்திய தேடுதலின்போது அதிகாலை 3.30 மணியளவில் கடலில் வைத்து 28 கிலோ 600 கிர்ாம் நிறையுடைய கஞ்சா போதைபொருள்களை அவர்கள் மீட்டனர்.

அத்துடன் அதனை வைத்திருந்தனர் எனத் தெ்ரிவிக்கப்படும் தமிழக மீனவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த மீனவர்கள் நால்வரையும் கடற்படையினர் தலைமன்னார் பொலிஸாரிடம் நேற்று ஒப்படைத்ததுடன் கஞ்சா பொதிகளையும் கையளித்துள்ளனர்.

இதையடுத்து மன்னார் மாவட்ட நீதிமன்றில் அவர்களை முற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## வாய்ப்பை...

கொண்டும் ஆசனம் வழங்கப்படக்கூடாது என்றும் அவர் தமது கட்டுப்பாட்டுக்குள் இருக்க மாட்டார் என்றும் அவர் கூறியுள்ளார். நான் இப்பொழுதும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக இருப்பதால் வேறு கட்சியில் ஆசனம் வழங்கப்படக்கூடாது என்றும் ஆனால் தாங்களும் வழங்கமாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார் என்று அவர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்த ஆனந்தி, குறிப்பாக தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் யுத்தத்தில் இந்தியாவின் பங்கு குறித்து தான் குறிப்பிடுவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அறவே பிடிக்கவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

மாகாண சபை உறுப்பினராக இருந்து கொண்டு தான் கூறும் இவ்வாறன உண்மையான கருத்துக்கள், தான் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டால் பெறுமதி பெற்றுவிடும் என்றும் அது கூட்டமைப்புக்கு சங்கடமான நிலைமையினை உருவாக்கிவிடும் என்றும் கூட்டமைப்பு தலைமை கருதுவதாகவும் அவர் கூறினார்.

## தேர்தலில்...

சித்தார்த்தன் ஆகியோர் கூட்டமைப்பின் தரப்பில் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

இந்தப் பேச்சுக்களை அடுத்து கருத்து வெளியிட்ட, முன்னாள் போராளிகள் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ந.வித்தியாதரன், தமக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பக்கும் இடையில் நடந்த சந்திப்பு வெற்றியளிக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், அவர்களுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்பத்தை, இந்தச் சந்திப்பின்போது முன்வைத்தோம்.

எனினும் இப்போதைய அரசியல் சூழலில் முன்னாள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவது தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு நெருக்கடியைக் கொடுப்பதாக அமையும் எனக் கூறி எமது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, முன்னாள் போராளிகள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து அரசியலில் ஈடுபடுவதற்கு கூட்டமைப்பு இணங்கவில்லை என்பது தமக்கு வேதனையும் மனவருத்தமும் அளிக்கிறது என, கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் போராளி துளசி தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பது குறித்து, தாம் பேச்சுக்களை நடத்தி தீர்மானிக்கப் போவதாகவும் துளசியும் வித்தியாதரனும் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

## அதிகரிக்கிறது...

நிலையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு வாக்களிப்பு நிலையங்கள் அமைக்க வேண்டுமென மக்கள் கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

எனவே இதனைக் கவனத்தில் கொள்ளும் பட்சத்தில் இம்முறை வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## ஜி.எஸ்.பி...

செய்யப் பட்டிருந்தது.இதன் காரணமாக பல்வேறு ஆடைத் தொழிற்சாலைகள் மூடப் பட்டதோடு, சில நிறுவனங்கள் நட்டத்தை எதிர் கொண்டுள்ளன.

இந்த நிலையை கவனத்திற் கொண்டு ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை மீளப்பெற்றுக்கொள்ளும் முயற்சியில் கடந்த அரசாங்கம் ஈடுபட்டு வந்த போதிலும் அது பலனளிக்கவில்லை.

கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஆட்சிக்குவந்த நல்லாட்சி அரசாங்கத்தின் வினைத்திறன் மற்றும் பேச்சுத்திறனால் முன்னர் இழக்கப்பட்டிருந்த ஜி.எஸ்.பி. வரிச்சலுகை வெகு விரைவில் பெற்றுக்கொள்ளப்படும் என வெளிவிவகாரப் பிரதியமைச்சர் அஜித்.பி.பெரேரா மேலும் கூறியுள்ளார்.

## அமெரிக்க...

கைவிட முடிவு செய்துள்ளார்.

போர்க்குற்றங்கள் தொடர்பான அமெரிக்காவின் சட்டங்களின் படி, அமெரிக்க குடிமகன் ஒருவர், உலகில் எந்தப் பாகத்தில், போர்க்குற்றங்களை இழைத்திருந்தாலும், அவரை அமெரிக்க சட்டங்களின் கீழ் விசாரித்து தண்டிக்க முடியும்.

கோத்தாபய ராஜபக்ஷ மீது போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டால், அவர் மீது அமெரிக்கா நேரடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் நிலை இருந்ததாலேயே அவர் அமெரிக்க குடியுரிமையை கைவிட முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# திருமலையில் மனிதப் புதைகுழி

## களநிலையில் ஆய்வு



திருகோணமலை மக்கேசர் விளையாட்டரங்கில் மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதியை பரிசீலிக்கும் பணிகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் 13.02.2014 புனரமைப்பு பணியின் போது 5 அடி ஆழத்தில் மனித எலும்புகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அந்தப் பகுதியை நேரில் பார்வையிட்ட திருகோணமலை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜவால் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுவதாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவைத் தொடர்ந்து, அதன் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்தநிலையில், நேற்றுக் காலை 9.00 மணி அளவில் மீண்டும் அப்பகுதியை பரிசீலிக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பரிசோதனையில் திருகோணமலை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா மற்றும் சட்டவைத்திய அதிகாரி, குற்றவியல் தடையப் பொலிஸ் பிரிவினர் உட்பட நில அளவைத் திணைக்களத்தினர் ஸ்தலத்திற்கு வருகை தந்திருந்தனர்.

## ஆசனப்...

வரும் நாடாளுமன்றத் தேர்தலில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும், இலங்கை தமிழரசுக் கட்சி 24 வேட்பாளர்களை நிறுத்தவுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். 8 வேட்பாளர்களையும், ரெலோ 7 வேட்பாளர்களையும், புளொட் 4 வேட்பாளர்களையும் நிறுத்தவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாவட்ட ரீதியாக, யாழ். மாவட்டத்தில், தமிழரசுக் கட்சி 6 வேட்பாளர்களையும், ஈ.பி.ஆர்.எல்.எவ். 2 வேட்பாளர்களையும், புளொட் மற்றும் ரெலோ ஆகியன தலா ஒரு வேட்பாளரையும் நிறுத்தும்.

வன்னி மாவட்டத்தில், தமிழரசுக் கட்சி 3 வேட்பாளர்களையும், ரெலோ 3 வேட்பாளர்களையும், ஈ.பி.ஆர்.எல்.எவ். 2 வேட்பாளர்களையும், புளொட் 1 வேட்பாளரையும் நிறுத்தவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி 5 வேட்பாளர்களையும், ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் மற்றும் ரெலோ ஆகியன தலா 1 வேட்பாளரையும் நிறுத்தும்.

அம்பாறை மாவட்டத்தில், தமிழரசுக் கட்சி 6 வேட்பாளர்களையும், ஈ.பி.ஆர்.எல்.எவ். 2 வேட்பாளர்களையும், புளொட் மற்றும் ரெலோ ஆகியன தலா 1 வேட்பாளரையும் நிறுத்தவுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில், தமிழரசுக் கட்சி 4 வேட்பாளர்களையும், ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ரெலோ ஆகியன தலா 1 வேட்பாளரையும் நிறுத்துவதென தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

## வடக்கில்...

மின்னிணைப்பு அண்மையில் மிகக்கூடிய செலவில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இப்பகுதி மக்களின் மின் தேவை பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

எனினும் மின்சார சபையின் வடமாகாண அலுவலகம் மாங்குளத்திலேயே அமைக்க ஏற்பாடாகியிருந்த பொழுதிலும் இன்று இங்கு பிரமாண்டமான அலுவலகம் அமைய முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், முன்னாள் வடமாகாண ஆளுநருமே கடுமையாக உழைத்து இதை இன்று உங்களுக்கு வழங்கக்கூடியதாக உள்ளது என்பது மகிழ்ச்சியே.

ஆசியாவிலேயே இலங்கையில்தான் 24 மணிநேரமும் முழுமையாக மின்விநியோகம் இடம்பெற்று வருகின்றது. இந்தியா, பாகிஸ்தானில் கூட மின்வெட்டே தற்போதும் இடம்பெறுகின்றது.

இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்துப் பகுதிகளுக்கும் மின் விநியோகம் மேற்கொள்ளப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து புத்தளம் வரையான பகுதிகளில் காற்றாலை மூலமான மின் பெறும் வசதியும், சூரியகலத்திலான மின் பெறுகை என்பன மேற்கொள்ள பல திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கான சகல செலவும் மின்சார சபையின் வருமானத்தைக் கொண்டே மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை மன்னாரில் எண்ணெய் ஆய்வுகள் இடம்பெறுகின்றன. அவ்வாறான ஒரு வரப்பிரசாதம் கிடைக்கும் பட்சத்தில் நைஜீரியா போல் அல்லாது நோர்வே போன்று எமது நாடும் மேலும் வளர்ச்சிபெறும் என நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)



# மகிந்தவின் மீள் வருகை மக்களின் கைகளில்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வருவது மக்களின் முடிவிலேயே தங்கியுள்ளது என மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நேற்று மின்சார சபையின் வட மாகாண காரியாலத்தைத் திறந்து வைத்தவேளையில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த தேர்தலில் பங்குகொள்வது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியே தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு தேர்தலில் பங்குகொண்டாலும் பதவிக்கு வருவது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# உதயங்கவின் கொள்கலனை மோசடி விசாரணைப் பிரிவு கைப்பற்றியது

(கொழும்பு)

உக்ரைன் போராளிகளுடன் ஆயுதக் கடத்தல்களில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு சொந்தமான பொருட்கள் அடங்கிய கொள்கலன் ஒன்று கொழும்பு நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

உதயங்க வீரதுங்கவின் இராஜதந்திர கடவுச்சீட்டை வெளியுறவு அமைச்சில் ஒப்படைக்குமாறு பல முறை அறிவித்த போதிலும், இதுவரையில் அவர் ஒப்படைக்கவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், கடவுச்சீட்டை ஒப்படைக்கும் வரையில் கொள்கலனை விடுவிப்பதில்லை என வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மஹேனி இது தொடர்பில் கருத்து வெளியிடும்போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மிக் விமான கொள்வனவில் முக்கிய சந்தேக நபர்கள் உதயங்க வீரதுங்க மற்றும் கோத்தபாய ராஜபக்சவாகும். அவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு நெருங்கிய உறவினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சடலம் மீட்பு

கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அண்மையில் நேற்று திங்கட்கிழமை மாலை உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

வெற்றுக்காணி ஒன்றில் சடலம் இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைக்கக்கப்பெற்றதை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளனர்.

எனினும் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் அங்கிருக்கும் எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

## இனிக்கட்டும் திருமண பந்தம்



மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர, நேற்று திருமண பந்தத்தில் இணைந்துகொண்டார். பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளரும் நடிகரும் ஆடை வடிவமைப்பாளருமான ஹிரான் யட்டோரவ் உடனான இந்த திருமண வைபவத்தின் போது...

# போதைப் பொருள் விற்பனை குடும்பப் பெண்ணுக்கு தடுப்புக் காவல்

(பருத்தித்துறை)

ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபரான குடும்பப் பெண் ஒருவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில். வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹெரோயின் போதைப் பொருளைத் தன்வசம் வைத்திருந்த நபரொருவரை கடந்த 3 ஆம் திகதி அதிவிசேட போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் சிலாபத்தில் வைத்துக் கைது செய்திருந்தனர்.

குறித்த சந்தேக நபர் வழங்கிய தகவலின் அடிப்படையில், யாழ். பருத்தித்துறை கலங்கரை விளக்கு பகுதியைச் சேர்ந்த கணவன் மற்றும் மனைவியை பருத்தித்துறை நகரில் வைத்து கைது செய்யப் பொலிஸார் முற்பட்ட வேளையில் கணவன் தப்பியோடியுள்ளார்.

இந்த நிலையில், மனைவியிடமிருந்து 10 மில்லியன் ரூபா பெறுமதியான 280 கிராம் ஹெரோயின் போதைப் பொருளைக் கைப்பற்றிய அதிவிசேட போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர், குறித்த பெண்ணை அவரது கைக் குழந்தையுடன் நேற்று நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது சந்தேக நபரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ம. கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, தப்பிச் சென்றுள்ள பெண்ணின் கணவன் நீண்ட நாட்களாக ஹெரோயின் மற்றும் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுவரும் முக்கிய நபர் எனவும், அவரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

## விளக்கமறியல் நீடிப்பு

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைதான இந்திய மீனவர்கள் 26 பேரையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட பதில் நீதவான் எஸ்.சுப்பிரமணியம், நேற்று உத்தரவிட்டார். கடந்த மாதம் ஜீன் 21ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பை அண்மித்த இலங்கை கடற்பரப்பில் 05 விசைப்படகில் வந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக காரைக்கால் மற்றும் நாகப்பட்டிணத்தை சேர்ந்த 26 மீனவர்களை காங்கேசன்துறை கடற்படையினர் கைது செய்திருந்தனர். தொடர்ந்து அவர்கள், யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

# யாழ். மத்தியின் இலட்சனை வெளியீடு



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பிரபல ஆண்கள் பாடசாலையாக யாழ். நகரின் மத்தியில் விளங்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு விழா நிகழ்விற்க்கான உத்தியோக பூர்வ இலட்சனை வெளியீட்டு விழா நேற்றுக் காலை கல்லூரியின் றொமைன்குக் மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இலட்சனை வெளியீட்டு நிகழ்வில் யாழ். மெதடிஸ்மிஷன் திருச்சபை தேவாலய குருமுதல்வர் வண. ரவிசங்கர் நைல்ஸ் அடிகளார் கலந்துகொண்டு இலட்சனையை திரை நீக்கம் செய்து வெளியிட்டு வைத்தார். இந்நிகழ்வில் கல்லூரியின் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

கல்லூரியின் 200ஆவது ஆண்டு விழா நிகழ்வுகளின் ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தொடக்கம் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (63)

# யுனிஸ்கான், மசூட் சதம் தொடரை வெல்லும் முனைப்பில் பாக்.

(பல்லேகல)

இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிக் கொள்ளும் முனைப்புடன் பாகிஸ்தான் அணி பல்லேகல டெஸ்ட் போட்டியில் ஆடி வருகின்றது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டம் பல்லேகலவில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய இலங்கை அணி 278 ஓட்டங்களையும், பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸிற்காக 215 ஓட்டங்களைப் பெற்றிருந்தன.

63 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இலங்கை அணி முன்னணி துடுப்பாட்ட வீரர்களை இழந்து தவித்தபோதிலும் கப்டன் மத்தியூஸ் மற்றும் சண்டிமல், உப்புல் தரங்க ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 313 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மத்தியூஸ் 122, சண்டிமல் 67, தரங்க 48 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இன்ரான்கான் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 377 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய பாகிஸ்தான் அணி முதலிரு விக்கெட்டுக்களையும் 13 ஓட்டங்களைப் பெற்ற வேளை பறிகொடுத்தது. தொடர்ந்து களம் புகுந்த யுனிஸ்கான், மசூட் ஆகியோர் பொறுப்புடன் செயற்பட்டு அணியை நெருக்கடியிலிருந்து மீட்டதுடன் சதமடித்தும் அசத்தினர். இறுதியில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை பாகிஸ்தான் அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் யுனிஸ்கான் 101, மசூட் 114 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். போட்டியின் இறுதி நாளான இன்று எட்டு விக்கெட்டுக்கள் கைவசம் வைத்துள்ள பாகிஸ்தான் அணி வெற்றியைப் பதிவு செய்வதற்கு இன்னும் 148 ஓட்டங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியில் பாகிஸ்தான் வெற்றிபெறும் பட்சத்தில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிக் கொள்ளும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.